# குயிலும்
# சிறுச்ஸப் பர்வதத்தின்
# சாரலும்

நாரா நாச்சியப்பன்



# குயிலும்
# சஞ்சீவி பர்வதத்தின்
# சாரலும்
## (ஒப்பீடு)

நாரா நாச்சியப்பன்

**தமிழாலயம்**
137, ஜானி ஜான் கான் தெரு
சென்னை-600 014.

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the book | — | KUYILUM Sanjeevi Parvathathin CHAARALUM |
| Author | — | NARA NACHIAPPAN |
| Language | — | Tamil |
| Publication | — | July, 1986. |
| Copy-right | — | Author |
| Paper used | — | 10.9 kg White Printing |
| Size | — | Crown octavo |
| Printing types used | — | 10 pt. |
| Pages | — | 64 |
| Copies | — | 1000 |
| Price | — | Rs. 5/- |
| Printers | — | NOVEL ART PRINTERS Madras-600 014. Phone : 82731 |
| Cover Design | — | Thennan |
| Publishers | — | Thamizhalayam 137, Jani Jan Khan Road, Madras-600 014. |
| Subject | — | Comparative Criticism on the works by Bharathi and Bharathi Dasan entitled Kuyil and Sanjeevi Parvathathin Chaaral. |

**Copies available at :**

M/s Paari Nilayam, 184, Prakasam Road,
Madras—600 001.

M/s Ainthinai Pathippakam, 282, Bharathi Salai,
Madras—600 005.

M/s Anand Publications, 15, Theetharappan Street,
Madras—600 005.

# முன்னுரை

செந்தமிழ் நாடெனும்
போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது
காதினிலே!

சின்னஞ்சிறு வயதிலே செவியில் பட்ட இந்தப்பாட்டு இன்றைக்குப் படித்தாலும் இன்பக் கிளர்ச்சி யூட்டுவதாக இருக்கிறது; வீர உணர்வும்; நாட்டுப் பற்றும் ஊட்டுவதாக இருக்கிறது. இப்படிப்பட்ட தேனான பாக்கள் பலவற்றைப் பாடிய பாரதியாரை எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் ஓர் உரிமையுணர்வு நெஞ்சகக்குள்ளே பூத்துக் குலுங்குகிறது.



விட்டு விடுதலை
யாகிநிற்பாய்—ஒரு
சிட்டுக் குருவியைப்
போலே!

பாரதியாரின் தேசியப் பாடல்கள் இளம் நெஞ்சங்களிலெல்லாம் விடுதலை யுணர்ச்சியை ஊட்டிக் கொண்டிருந்த காலம்.

வந்தே மாதரம்! எனற முழக்கம் இளைஞர்களின் எழுச்சி முழக்கமாக விளங்கிய அந்த நாட்களிலே, காந்தியடிகளைப் போலே, நேதாஜியைப் போலே, நேருவைப் போலே, பாரதியாரும் தமிழ்நாட்டு இளைஞர்களின் நெஞ்சில் நிலைத்த குடி கொண்ட சான்றோராக விளங்கினார்.

நாட்டுணர்வும் மொழியுணர்வும் கொண்ட இளைஞர் களுக்கெல்லாம் எடுத்துக் காட்டாகவும், வழிகாட்டியாகவும், ஞான குருவாகவும் விளங்குகிறார் பாரதியார்.

வயது ஏறஏற, படிக்கும் வகுப்புகளின் எண்கள் கூடக்கூட இலக்கிய உணர்வுகள் கூடிவந்தன.

பாரதியாரின் தேசீயப் பாடல்களிலே வசமாகி நின்ற நெஞ்சு பிடி கழன்று இலக்கியப் பாடல்களுக்குத் தாவியது.

பாஞ்சாலி சபதம், பாரதி அறுபத்தாறு, கண்ணன் பாட்டு போன்ற இலக்கியப் பாடல்கள் புதுச்சுவை தருவன வாக விளங்கின.

எங்கள் தமிழாசிரியர் பாரதியாரின் பாடல்களிலேயே மிகச் சிறந்தவை கண்ணன் பாட்டும், குயிலும்தான் என்று அழுத்தமாகக் கூறினார். அவர் கூறிய பிறகு, சற்று ஆவலோடு அப்பாடல்களைப் படிக்கத் தொடங்கினேன். படிக்கும்போதே ஒரு புதிய உலகுக்குள்—இன்பமயமான ஒரு விந்தை யுலகுக்குள் புகுந்த உணர்வு தோன்றியது. அத்தனை நேர்த்தியாகப் படைத்திருந்தார் பாரதியார்.

இளமைப் பருவமும், இலக்கிய ஆர்வமும், தமிழ்க் காதலும் ஒன்று சேர்ந்து—பாரதியின் இலக்கியப் படைப்பில் இன்பங் காணும் உணர்வைத் தோற்றுவித்தன என்றால் தவறில்லை.

குயில் பாட்டு படிக்கப் படிக்கச் சுவை கூட்டும் சிறு காவிய மாக விளங்கியது. மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டுவதாக அமைந்திருந்தது. ஒவ்வொரு முறை படிக்கும் போதும் புதுப்பொருள் புதுநயம் பொலிந்து விளங்கியது. அத்தனை மேன்மையாகப் படைத்திருந்தார் பாரதியார்.

பாரதியாரின் பாடல்களில் ஈடுபட்டுப் பழகிய நெஞ்சுக்குப் புதிதாகப் பாரதிதாசன் அறிமுகமானார். குடும்ப விளக்கின்

மூலம் புதுமதிப்பைப் பெற்று அறிமுகமான பாவேந்தர், பாரதிதாசன் கவிதைகள் மூலம் நெஞ்சரங்கில் இடம் பிடித்துக் கொண்டார்.

பாரதியார் தொட்டுக் காட்டிய பலதுறைகளை விரித்து விளக்கிப் பேசும் விரிவுரையாளராக விளங்கினார் பாவேந்தர்.

குயில் பாட்டில் நெஞ்சைப் பறிகொடுத்திருந்த எனக்கு பாவேந்தரின் சஞ்சீவி பர்வதத்தின் சாரல் பாட்டு கவர்ச்சி ஏற்படுத்தியது.

அச்சடையாளம் குயில்பாட்டுப் போலவே அமைந்திருந்த இந்த நெடும்பாட்டு முதலில் ஏதோ குயில்பாட்டை அப்படியே (காப்பியடித்து) நகலெடுத்தது போன்ற எண்ணத்தையே தோற்றுவித்தது. ஆனால் தொடர்ந்து வரிவரியாய் அடியடியாய்ப் படிக்கத் தொடங்கியபோதுதான், புதுச் சுவையும் புதுப்போக்கும், புதுக்கருத்தும் இதில் பலப்பலவாய் விரிந்து கிடப்பதை யுணர முடிந்தது.

இக்காலத்தில் புதுக் கவிதை எழுதப்புகும் இளைஞர்கள் எதையும் ஆழ்ந்து படிக்காமல், சும்மா புரட்டிப்பார்த்து விட்டு, பாரதி, பாரதிதாசன், பாரதிதாசன் பரம்பரை யெல்லாம் ஒரே விருத்தம்! ஒரே ஸ்டீரியோ டைப்! என்று ஒதுக்கித் தள்ளிவிட்டு, 'மரபுக் கவிதை செத்துப் போய் விட்டது' என்று புதிய கண்டு பிடிப்புச் செய்து வெளிப்படுத்து வதுபோல் பேசிக் கொண்டு, பயனுள்ள பல இலக்கியங்களைத் தொட்டுப் பாராமலே, உணர்வுப் பூர்வமான ஓர் இலக் கியத்தைப் படைப்பதாக நடித்துக் கொண்டு, குப்பைகளை யும், கூளங்களையும், சதைப் பிண்டங்களையும், குறைப் பிரசவப்படுத்திக் கொண்டிருப்பதை நினைத்தால் பரிதாப மாய் இருக்கிறது. உள்ள குப்பைகளையே அள்ள முடியாமல் திணறிக் கொண்டிருக்கும் ஊழல் மாநகராட்சிகள் இந்தப்

புதுக்குப்பைகளை என்ன செய்யப் போகின்றனவோ தெரிய வில்லை. கூவத்தில் தான் கொட்டவேண்டும். கங்கையே கூவமாகிக் கொண்டிருக்கும் இக்காலத்தில் கூவம் கெட்டு விடும் என்று அஞ்சத் தேவையில்லை

நிற்க,

குயிலும், சஞ்சீவி மலைச் சாரலும் மிகச் சுவையான இரண்டு இலக்கியங்கள்! இவற்றைத் திரும்பத் திரும்பப் படித் தாலும் சலிப்புத் தோன்றுவதில்லை. மாறாக மீண்டும் சுவைக்கத் தோன்றும் மாயசக்தி பெற்றவையாக உள்ளன.

இவற்றைத் திரும்பத் திரும்பப் படித்ததன் விளைவாக இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.

ஒப்பாய்வு முறையில் நான் இதைச் செய்யவில்லை; எலும்புக்கூடுகளை எண்ணிப் பார்ப்பதில் நயமும் இல்லை. பயனும் இல்லை! துப்பறிவோர் மட்டுமே செய்ய வேண்டிய வேலையில் நான் தலையிட விரும்பவில்லை.

சுவை, உணர்வு, கருத்து என்ற அடிப்படையிலேயே இந்த ஒப்பீடு அமைந்துள்ளது.

பாரதியிலிருந்து பாரதிதாசன் எவ்வாறு மேம்படுகிறார் என்று நான் பார்க்கவில்லை. எவ்வாறு வேறுபடுகிறார் என்றே நோக்குகின்றேன். அந்த வேறுபாடு மேம்பாட்டை உண்டாக்குகிறதா இல்லையா என்பதை உங்கள் ஆய்வுக்கு விடும் தூண்டுகோலாக நான் இருக்கிறேன்.

**நாரா நாச்சியப்பன்**

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பாரதியும் பாரதிதாசனும் | 9 |
| 2. | தொடக்கம் | 13 |
| 3. | கதையமைப்பு | 15 |
| 4. | பாட்டின் இலக்கணம் | 21 |
| 5. | காதல் | 26 |
| 6. | கிண்டற்சுவை | 36 |
| 7. | மெய்யுணர்தல் | 44 |
| 8. | ஆய்வுரை | 55 |
| 9. | பாரதியும் பாரதிதாசனும் | 59 |
| 10. | பாரதிதாசன் | 64 |

# பாரதியும் பாரதிதாசனும்

பாரதியும் பாரதிதாசனும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள். இருவரும் மிகச் சிறந்த பாவலர்கள். இருவரும் புதுமை நோக்குள்ளவர்கள். புரட்சிக் கருத்துடையவர்கள்.

பாரதி நாட்டு விடுதலைக்காகப் பாடியவர். மக்கள் யாவரும் ஒப்பென்று எண்ணியவர். நடைமுறையில் பொது எண்ணத்தோடு வாழ்ந்தவர். அவருடைய புதுமைக் கருத்துக்களிலே மனத்தைப் பறிகொடுத்து, அவருடைய கூட்டுறவில் இன்பம் கண்டு, அவரை வழிகாட்டியாகக் கொண்டு, இலக்கிய வாழ்வு மட்டுமன்றிப் பொதுவாழ்வும் கொண்டவர் பாவேந்தர் பாரதிதாசன்.

பாரதியிடம் கொண்ட உண்மையான ஈடுபாட்டின் காரணமாகத் தம் பெயரையே பாரதிதாசன் என்று மாற்றி வைத்துக் கொண்டவர்.

பாரதியின் புரட்சி வழியைப் பின்பற்றிய பாரதிதாசன், பாரதியினும் தீவிரமான சமுதாயப் புரட்சி வழியிலே நடைபோடத் தொடங்கிப் பெரும்புரட்சியாளராக மாறிய நிலையிலும், பாரதியிடம் கொண்டிருந்த மதிப்பில் சிறிதுகூட மாற்றங்கொள்ளவில்லை.

கு—1

பாரதி எண்ணிக்கூடப்பாராத—புரட்சியின் உயர் நிலையாகிய— தன்மானக் கருத்துக்களைக் கொண்டபோதும் கூட அவர் 'பாரதிதாசன்' என்ற தம்பெயரை மாற்றிக்கொள்ளவில்லை.

பறையருக்கும் இங்குதீயர் புலையருக்கும் விடுதலை
பரவரோடு குறவருக்கும் மறவருக்கும் விடுதலை

என்று உண்மையான விடுதலையைக் கனவு கண்டு பாடியவன் பாரதி.

ஏழையென்றும் அடிமை யென்றும்
எவரும் இல்லை சாதியில்
இழிவு கொண்ட மனிதரென்ப
திந்தியாவில் இல்லையே

என்று சமான வாழ்வைப் பாடியவன் பாரதி.

சுதந்திரம் வந்தால் அது எப்படி இருக்கவேண்டும் என்ற உண்மையான உரிமை வாழ்வைக் கற்பனை செய்து கனவு கண்டவன் பாரதி.

அவனுடைய சுதந்திரப் பள்ளுப் பாட்டு, வெள்ளையனை விரட்டியடித்தபின் இருக்க வேண்டிய பாரதத்தின் உண்மையான படப்பிடிப்பு. பரங்கியரைத் துரத்தியபின் ஏற்றம் போட்டு விடக்கூடிய பார்ப்பனரை ஆதிக்கம் பெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய விழிப்புணர்வை சுதந்திரப் பள்ளுப் பாடலில் காண்கிறோம்.

உண்மையான சுதந்திரம், விழிப்புச் சுதந்திரமாக இருக்க வேண்டும் என்பதை சுதந்திரப் பள்ளுப்பாட்டு உணர்த்துகின்றது.

வெள்ளைக்காரனிடமிருந்து விடுதலை பெறுவது மட்டும் சுதந்திரம் என்று பாரதி நினைக்கவில்லை. நம் நாட்டுக்குள்ளேயே நிலவி வருகின்ற நீண்டகால அடிமைப்பழக்க

வழக்கமும் தொலைந்து உண்மையான உழைக்கும் வர்க்கம் சுதந்திரம் அடையவேண்டும் என்ற கருத்தினைக் கூறு கின்றான்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்— வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்! என்று உழைக்காமல் ஊரை ஏமாற்றித் தின்போரைச் சாடுகின்றான். அவ்வாறு பெற்ற சுதந்திரம் வீணர் அதிகார ஆட்சியில் சிக்கிவிட்டால் அது விழலுக்கு இறைத்த நீராகி விடும் என்பதை உணர்த்துகின்றான்.

விழலுக்கு நீர்பாய்ச்சி மாயமாட்டோம்—வெறும்
வீணருக்கு உழைத் துடலம் ஓயமாட்டோம்.

எல்லோரும் ஒன்றென்னும்
காலம் வந்ததே—பொய்யும்
ஏமாற்றும் தொலைகின்ற
காலம் வந்ததே—இனி
நல்லோர் பெரிய ரென்னும்
காலம் வந்ததே—கெட்ட
நயவஞ்சக் காரருக்கு
நாசம் வந்ததே!

என்று ஏமாற்றிப் பிழைக்கும் கூட்டத்துக்குச் சாபம் இடு கின்றான்.

சுதந்திரப் போராட்டம் வெள்ளைக்காரனை எதிர்த்துத் தொடங்கியது. அன்னியனாகிய பரங்கியனை நம்நாட்டை விட்டு அப்புறப்படுத்துவதற்காகத் தொடங்கியது. வெள்ளை யனே வெளியேறு எங்கள் நாட்டை நாங்களே ஆள்வோம் என்று பாரத வீரர்கள் ஆர்ப்பரித்து அறப்போர் நடத்திய காலத்தில் சுதந்திரப்பள்ளு எப்படிப் பிறந்திருக்க வேண்டும். முற்றிலும் வெள்ளையனைச் சாடியிருக்கவேண்டும் அல்லவா?

ஆனால் எடுத்த எடுப்பிலேயே
பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே

என்று சுதந்திரப் பள்ளு தொடங்குகின்ற தென்றால், நாட்டில் பார்ப்பன ஆதிக்கம் வேரூன்றியிருந்தது பாரதியாரை எவ்வளவு உறுத்தியிருக்க வேண்டும். முதலில் இந்த அடிகளைச் சொல்லி விட்டுப் பிறகுதான் வெள்ளைப் பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே என்று பாடுகின்றான்.

பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே —வெள்ளைப்
பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே—பிச்சை
ஏற்பாரைப் பணிகின்ற காலமும் போச்சே—நம்மை
ஏய்ப்போருக் கேவல்செய்யும் காலமும் போச்சே.

என்று உண்மையான சுதந்திரப் பள்ளைப் பாடுகின்றான். இப்படிப்பட்ட உண்மையான சுதந்திரக் கருத்துக் கொண்டிருந்த பாரதியைத் தன் வழிகாட்டியாகக் கொண்டு தன் பெயரையும் பாரதிதாசன் என்று பெயர் மாற்றிக் கொண்ட சுப்புரத்தினம் கடைசிவரை பாரதிதாசனாகவே இருந்தார்.

பாரதியினும் தீவிரமாக அவர் தன்மானக் கொள்கை வீரராக விளங்கினார்.

பாரதியின் குயில் பாட்டை அடியொற்றி அவர்தம் சஞ்சீவி பர்வதத்தின் சாரல் என்ற பாட்டை எழுதுகின்றார். பாரதி கையாண்ட கலிவெண்பா யாப்பிலேயே தம் நூலையும் படைக்கின்றார். அந்தப் பாட்டைத் தொடங்கும்போதே குயில் என்ற சொல்லில்தான் தொடங்குகின்றார். பாட்டின் முதல் அடி குயில் கூவிக் கொண்டிருக்கும் என்றே தொடங்குகின்றது.

# தொடக்கம்

குயில் பாட்டு நிகழ்ச்சி, புதுவைக்கு மேற்கேயுள்ள ஒரு மாஞ்சோலையில் நடக்கின்றது. சஞ்சீவி மலைச்சாரலில் நடக்கிறது பாரதிதாசனின் பாட்டு நிகழ்ச்சி. கவிஞர்கள் தத்தம் பாட்டு நிகழும் இடங்களை அறிமுகப் படுத்து கிறார்கள்.

இந்த அறிமுகம் ஒரே மாதிரியாக இருக்கிறது. இடத்தின் இயற்கை நிலையை இரு கவிஞர்களும் அழகு ததும்ப வருணிக் கிறார்கள்.

இந்த அறிமுகம் அவர்கள் பாடப்போகும் போக்கையே அறிமுகப் படுத்துவதாக அமைந்துள்ளதைக் காணலாம்.

நீலமணியொன்று நெருப்பின் எதிரில் வைத்தால் எப்படி ஒளி பொருந்தித் திகழுமோ அப்படி ஒளிபெற்றுத் திகழ்கிறது காலையிளங்கதிர் பட்ட நீலக்கடல்.

அந்த நீலக்கடல் வேதத்தின் கருத்தைப் பாடிக் கொண் டிருக்கும் அலைக் கைகளினால் கரையை மோதித் தழுவு கின்றது. இப்படிப்பட்ட வளமான கரைகளையுடைய புதுவை நகரின் மேற்கே சிறிது தொலைவில் ஒரு மாஞ் சோலை யிருக்கிறது. அந்தச் சோலையில் வேடர்கள் பறவை சுட வருவது வழக்கம். இப்படிப்பட்ட அழகிய பெருஞ் சோலையில், வேடர்கள் வராத ஒரு நல்ல நாளில் பெட்டைக் குயில் ஒன்று இனிய பாடலை இசைத்துக் கொண்டிருக்கிறது,

குயில் பாட்டு மேற்கண்டபடி தொடங்குகின்றது.

குயில் கூவிக் கொண்டிருக்கும். அழகு மிக்க மயில் ஆடிக் கொண்டிருக்கும். மணமிக்க காற்று குளிர்ச்சியாக வீசும். கண்ணாடி போன்ற தெளிந்த நீர் ஊற்றுகள் இருக்கும். பழ மரங்கள் நிறைய உண்டு. பூக்களிலே தேனீக்கள் இருந்து இசைபாடிக் கொண்டிருக்கும். இந்த இடத்தில் வேட்டுவப் பெண்கள் விளையாடப் போவதுண்டு. காட்டு மறவர்கள் அப்பெண்களைக் கண்டு காதல் மணம் புரிவதுண்டு. இப்படிப் பட்ட அழகான இடம்தான் சஞ்சீவி மலைச்சாரல்.

இப்படிக் கதை நடக்கும் இடத்தை அறிமுகப்படுத்து கின்றார் பாவேந்தர் பாரதிதாசன்.

கதைத் தலைவியான குயிலின் பெயர் பாரதியாரின் பாடல் தலைப்பாகிறது.

கதை நிகழும் இடமான சஞ்சீவி பர்வதத்தின் சாரல் பாவேந்தரின் பாடல் தலைப்பாகிறது.

இருபுலவர்களும் வெண்பாவை மிக எளிதாகக் கையாளு கிறார்கள். பாடல்கள் இயற்கையாக உள்ளன. எளிமையாக உள்ளன. சுவையாக உள்ளன. பண்டித வல்லமைகள் எதுவும் இல்லாமல்—ஒளிவு மறைவான பொருள் எதுவும் இல்லாமல்—சொல்லவந்த கருத்தைப் படிப்பவரின் மனத்தில் சேர்க்கும் எளிமையான முறையில் நேரடியாக அழகு ததும்பச் சொல்லப்படுகிறது.

பாரதியாரின் சிறந்த படைப்புக்களிலே தலையாயது குயில்பாட்டு. இலக்கிய நயம் ததும்பும் அரியபாடல். அது போலவே பாரதிதாசனின் அரிய படைப்பு சஞ்சீவி பர்வதத் தின் சாரல். கவிதை நயம் காட்டும் அற்புதமான அடிகள் புலவற்றைச் சாரலிலே காணலாம்,

# கதையமைப்பு

குயில் கதை ஒரு புராணக் கதையாக அமைந்துள்ளது. பழம் பிறப்புக் கொள்கை யடிப்படையிலே கதையைப் பின்னி அதில் வேதாந்தக் கருத்து விரவியிருப்பதாகக் கூறிப் பாட்டை முடிக்கிறார் பாரதியார். புதுமைக் கொள்கையைப் பாடும் பாரதியார், பழம் புராண நம்பிக்கைகளிலிருந்து விடுபடாதவராகவே காட்சியளிக்கின்றார்.

சாரல் கதை பழம் புராணங்களின் மூடத் தனத்தை முறியடிக்கும் குறிக்கோளுடனேயே பாரதிதாசனால் படைக்கப் பட்டிருக்கிறது. தன் குறிக்கோளை அது செம்மையாகச் செய்கிறது. வெறும் குறிக்கோள் உரையாக இல்லாமல் இலக்கியச் சுவையுள்ள ஒரு படைப்பாக அமைந்துள்ளது. அறிவுக் கருத்துக்களை வெல்லம் போன்ற இனிய தமிழில் சுவைமிக்க கற்பனை நயத்தோடு திறமாகப் படைத்துள்ளார் பாரதியின் தாசன்!

## குயில் பாட்டின் கதை

குயில் மோகன இசை பாடிக் கொண்டிருக்கிறது. பாவலர் அங்கே செல்கிறார். குயில் தன் காதலை வெளிப் படுத்துகிறது. மீண்டும் நான்காம் நாள் சந்திக்க வருமாறு குயில் கூறுகிறது. காதல் வெறி யுந்த மறுநாளே பாவலர் சோலைக்குச் செல்கிறார்.

அங்கே கண்ட காட்சி பாவலரைத் திடுக்கிட வைக்கிறது. குயில் ஓர் ஆண் குரங்குடன் காதல் பேசிக் கொண்டிருக்கிறது· மானிடர்களைப் பழித்து இளக்காரமாகப் பேசுகிறது. சினத்துடன் பாவலர் வாளை வீச குரங்கு தப்பிப் போகிறது· குயிலும் மறைகிறது.

மூன்றாம் நாள் மீண்டும் சோலைக்குப் போகிறார். அப்போது குயில் ஒரு காளை மாட்டுடன் காதல்பேசிக் களிக்கிறது. பாவலர் வாளெடுத்து வீசக் காளை மாடு தப்பியோடுகிறது. குயில் மறைந்து விடுகிறது.

பாவலர் வீடு திரும்புகிறார்.

மீண்டும் நான்காம் நாள்—குயில்—வரச்சொல்லித் தவணை கொடுத்த நாள்—பாவலர் போகின்றார்.

குயில் மீண்டும் பழைய காதல் பாட்டைப் பாடுகிறது. பாவலர் கோபத்தோடு அதன் பொய்க் காதலைக் கூறிச் சாடுகிறார்.

ஒரு முனிவர் தம் பழம் பிறப்பை யுணர்த்தியதாக ஒரு கதை கூறுகிறது குயில்.

குயில் முன்பிறப்பில் ஒரு வேடர் தலைவன் மகளாகப் பிறந்திருந்ததாம். மாமன் மகன் மாடன் சின்னக் குயிலி என்ற பெயருடைய இந்தப் பெண்ணைத் திருமணம் செய்யக் காத்திருந்தாராம். இதற்கிடையே வேறோர் வேடர் தலைவனுடைய மகன் நெட்டைக் குரங்கனுக்கு மணம் பேசி முடித்து வைத்திருந்தானாம் வேடர் தலைவன்.

இந்நிலையில் காட்டுக்கு வேட்டையாட வந்த சேரமான் மகனைக் கண்டு உண்மையான காதல் கொண்டாளாம் சின்னக் குயிலி. பாவலர் தான் முற்பிறப்பில் சேரமான் மகனாகப் பிறந்தவராம்,

இவர்கள் இருவரும் காதல் புரிந்து கொண்டிருந்த வேளையில் மாமன் மகன் மாடனும், நெட்டைக் குரங்கனும் அங்கு வந்து சேர, சேர இளவரசனுக்கும் அவர்களுக்கும் சண்டை மூண்டு ஒருவரை யொருவர் வெட்டிக் கொண்டு மூவரும் மடிந்து போனார்களாம். இந்தப் பிறப்பிலும், காதலுக்கு இடையூறாய் மாடனும், நெட்டைக் குரங்கனும் பிறந்து வந்து தொல்லை கொடுக்கிறார்களாம்.

முனிவர் கூறியதாக இந்தக் கதையைக் குயில் கூறிய வுடன், பாவலர் அதைப் பற்றி யிழுத்து முத்தமிட குயில் அழகிய பெண்ணாக மாறிவிட்டதாம். அந்த அழகு மகளுடன் பாவலர் சித்தம் மயங்கியிருந்த போது கனவு கலைந்து விட்டதாம்.

கனவில் தோன்றிய இந்தக் கற்பனையில் வேதாந்தக் கருத்துத் தொக்கியிருக்கிறது. அதைக் கண்டு கொள்வது கற்றோர் திறன் என்று முடிக்கிறார் பாரதியார்.

வேதாந்தமாக விரித்துப் பொருளுரைக்க
யாதானும் சற்றே இடமிருந்தாற் கூறீரோ?

இது பாரதியார் குயில் பாட்டைப் படிப்பவர்களுக்கு இடும் வேலை.

எந்தக் கதைக்கும் வேதாந்தக் கருத்துக் கூறுவது நம்மவர்களின் இயல்பு. அதுபோல் தன் கதைக்கும் கருத்துத் தேடியுரைக்குமாறு பாரதியார் வாசகர்களை வேண்டுகிறார்.

குயில் சீவான்மா என்றும், பாவலர் பரமான்மா என்றும், சீவான்மா பரமான்வாவோடு ஐக்கியப்படுவது முக்தி என்றும் முக்தியே பிறப்பின் இலட்சியம் என்றும் கூறுவது வேதாந்தம்.

பொதுவாக சீவான்மா பரமான்மாவை நாடுவது தான் இயற்கை. சில நேரங்களில் பரமான்மா வலிந்து ஆட்

கொள்ளச் சீவான்மாவைத் தேடிவருவது சிறப்பு. பாவலர் குயிலைத் தேடிச் செல்வது பரமான்மாவின் ஆட்கொள்ளும் அருள் குணத்தைக் காட்டுகிறது. சீவான்மா பரமான்மா விடம் ஐக்கியமாவதற்குத் தடையாயிருப்பது அதனிடம் உள்ள விலங்குணர்வும், அலைபாயும் மனவியல்பும் ஆகும். விலங்குணர்வுக்கு மாடும், அலைபாயும் மன இயல்புக்குக் குரங்கும் எடுத்துக் காட்டுகள். இவற்றைக் கொன்றபின், விட்டு விலகிய பின், சீவான்மா பரமான்மாவை அடைவது எளிதில் கை கூடுகிறது. இப்படித்தான் பாரதியாரின் குயில் பாட்டுக்கு வேதாந்தப் பொருள் உரைக்க முடியும்.

பாரதியார், புராணப் போக்குள்ள ஒரு கதையைக் கற்பனை செய்து அதில் வேதாந்தப் பொருள் இருக்கிற தென்ற குறிப்போடு கதையை முடிந்துவிட்டார். இப்படி அவருக்கொரு கற்பனை தோன்றக் காரணமாய் இருந்தது. அவர் பிறந்து வளர்ந்த சூழ்நிலை யென்று தான் சொல்ல வேண்டும். இலக்கியம் என்பவற்றில் பெரும்பாலானவை புராணங்களாகவும் இதிகாசங்களாகவும் இருப்பதால், அவற்றையே படித்தும் கேட்டும் பழக்கப்பட்ட பாரதியார் அதுபோன்ற ஒரு கதையைத் தாமும் படைக்க முற்பட்டது வியப்பன்று.

இனி பாரதிதாசனின் படைப்பான சஞ்சீவி பர்வதத்தின் சாரல் கதையைப் பார்ப்போம்.

## சாரல் கதையமைப்பு

சஞ்சீவி பர்வதத்தின் சாரலிலே முன் ஏற்பாட்டின்படி வஞ்சியும் குப்பனும் சந்திக்கிறார்கள்.

முன்னொரு நாள் குப்பன் இரண்டு மூலிகைகளைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தான். ஒன்றைத் தின்றால் உலக மக்கள் பேசுவது காதில் கேட்கும்; மற்றொன்றைத் தின்றால்,

அந்த இடத்தில் நடப்பனதைக் கண்ணால் பார்க்கலாம். இந்த மூலிகைகள் சஞ்சீவி மலையில் உள்ளன என்று குப்பன் கூறியிருந்தான். அவற்றைப் பறித்துத் தரும்படி வஞ்சி கூறவே, குப்பன் அவளை மலைக்கு அழைத்துச் செல்கிறான்.

மலையின் உச்சியில் மூலிகைச் செடியைக் காட்டி இவைதான் கிள்ளிக் கொள் என்கின்றான். மூலிகைகளைப் பறித்துக் கொண்டு இருவரும் கீழிறங்கி வந்து ஒரு மர நிழலில அமர்கின்றார்கள்.

எந்த மூலிகையைத் தின்றால், உலகத்துப் பேச்சுக்கள் கேட்குமோ அதை முதலில் தின்றார்கள். உலகத்து மாந்தர் அவரவர் மொழியில் பேசுவது இவர்களுக்குச் செந்தமிழில் மொழி பெயர்த்துக் (!) காதில் விழுகிறது.

முதலில் எங்கோ ஓர் உணவு விடுதியில் பிரான்சு நாட்டைச் சேர்ந்தவன் ஒருவன், இத்தாலி நாட்டான் ஒருவனிடம் பேசிக் கொண்டிருப்பது காதில் விழுகிறது. இத்தாலிக்காரனின் நிறபேத வாதத்தைப் பிரெஞ்சுக்காரன் கண்டிக்கிறான். அடுத்து அமெரிக்க நாட்டின் குரல் ஒலிக்கிறது. உலக சகோதரத்துவக் கொள்கையை அமெரிக்கன் ஒலிக்கின்றான்.

மூன்றாவதாக இங்கிலாந்து நாட்டானின் பேச்சுக் கேட்கிறது. இந்தியாவை ஆண்டு கொண்டிருக்கும் ஆங்கில நாட்டான், இந்திய மக்களின் குறைபாடுகளை எடுத்துக்கூறி அவர்கள் என்றென்றும் அடிமையாய் இருக்கவே தகுதியுள்ளவர்கள் என்று விளக்கமாக எடுத்துக் கூறிக் கொண்டிருக்கிறான்.

கடைசியாக அவர்கள் காதில் தமிழ் நாட்டுப் பேச்சு விழத் தொடங்குகிறது.

எங்கோ ஓர் வீட்டுத் திண்ணையில் ஒரு பாகவதர் இராமாயணம் படித்துக் கொண்டிருக்கிறார். அதில் அனுமன் சஞ்சீவி மலையைத் தூக்கிக் கொண்டு வரும் காட்சியை வருணித்துக் கொண்டிருக்கிறார்.

குப்பன் தாங்கள் சஞ்சீவி மலையில் இருக்கும்போது அந்த அனுமன் வந்து மலையைத் தூக்கிக் கொண்டு போனால், தங்கள் கதி என்ன ஆகும் என்று நினைத்துக் கலங்குகின்றான்.

வஞ்சி இப்போது தன் காதலனுககுப பகுத்தறிவுப்பாடம் போதிக்கின்றாள். உண்மை தெளிந்த குப்பனும் வஞ்சியும் சஞ்சீவி பர்வதத்தின் சாரலுக்குக் கீழிறங்கி வந்து, காதல் புரிந்து மனம் களிக்கின்றார்கள்.

இது பாரதிதாசனின் சஞ்சீவி பர்வதத்தின் சாரல் கதை.

பாரதியின் குயில் கதை கனவில் நிகழ்கின்றது.

சஞ்சீவிச் சாரல் கதையோ, மாயமூலிகையின் துணை யோடு நிகழ்கின்றது.

இரண்டுமே கற்பனைக் கதைகள். முன்னது, புராணப் போக்கில் அமைகின்றது. வேதாந்தம் பேசுகிறது. பின்னது புராணத்தின் புன்மைகளை எடுத்துக் காட்டிப் பகுத்தறிவு ஊட்டுகிறது.

# பாட்டின் இலக்கணம்

இரண்டு கவிஞர்களும், தாங்கள் எடுத்துக் கொண்ட கதையைச் சொல்ல கலிவெண்பாவைக் கையாளுகிறார்கள்.

வெண்பா நான்கடிகள் மட்டுமே கொண்டது.

அதே வெண்பா பதினோரடி வரையில் பஃறொடை வெண்பா எனப்படும். அதைத் தாண்டும்போது கலிவெண்பா எனப்படும். அடிவரையறை யற்ற வெண்பாவே கலி வெண்பா வாகும்.

நால்வகைப் பாக்களிலே வெண்பா எழுதுவது கடின மானது என்று இலக்கணப் புலவர்கள் சொல்லுவார்கள். ஆனால், பாரதியும் பாரதிதாசனும் எழுதியுள்ள வெண் பாக்களைப் பார்த்தால் கடினமாக எழுதியதுபோல் தோன்ற வில்லை. மிக எளிமையாக இயற்றியது போலவே தோன்று கிறது.

இலக்கணப் புலவர்கள் வெண்பா எழுதுவதை ஏன் கடின மானது என்று சொன்னார்கள்?

மற்ற பாக்களில் சீர் அமைப்பு ஒழுங்காக அமைந்திருந் தால் போதும். வெண்பாவில் ஒவ்வொரு சீரும் பின்வரும் சீருடன் சரியான வெண்டளையில் கட்டுண்டிருக்க வேண்டும்.

ஒரு சீர் மாச்சீராக முடிந்தால் வருசீர் நிரையசையில் தொடங்க வேண்டும்.

ஒரு சீர் விளச்சீரில் அல்லது காய்ச் சீரில் முடிந்தால் தொடர்ந்து வரும் சீர் நேரசையில் தொடங்க வேண்டும்.

இரண்டு அடிகள் ஒரே எதுகை யுடையனவாய் இருக்க வேண்டும். மூன்றாவது சீரில் மோனை அமைந்திருக்க வேண்டும்.

சொல்லுங் கருத்தைத் தெளிவாகச் சொல்ல வேண்டும்.

இரண்டு தடவை படித்தால் மனப்பாடம் ஆகிவிட வேண்டும். அவ்வளவு எளிமையாக அமைந்திருக்க வேண்டும் வெண்பா.

இப்படிப்பட்ட கட்டுப்பாடுகளோடு பாடுவது கடினம் என்று இலக்கணப் புலவர்கள் கருதுவார்கள்.

இலக்கணம் வேண்டாத புதுக் கவிதைக்காரர்களும், இந்தக் கட்டுப்பாடெல்லாம் தேவையில்லை. வடிவமைப்பு இல்லாமலே பாடல் படைக்கிறோம் என்று தமிழில் குப்பை பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

பயிற்சி பெற்ற ஒரு பெண். வண்ண நூல்களை எடுத்துக் கண்ணிக் கணக்கு வைத்துப் பின்னிக் கொண்டு வந்தால் அழகிய கைப்பை உருவாகிறது. அவளே பின்னுவது வீண் முயற்சி; பயிற்சிக்கு நேரம் ஒதுக்குவது கால விரயம் என்று சொல்லி கண்டில் உள்ள நூலைப் பிரித்து, தரையின் மீது கைக்கு வந்தபடி மேலே மேலே கோணலும் மாணலுமாய்ப் போட்டுக் கொண்டு வந்தால், எதற்கும் பயன்படாத குப்பை யாகி எடுத்தெறியத் தக்கதாய் இருக்குமே தவிர. போற்றி வைத்துக் கொள்வதாய் இராது. அதுபோலவே, புதுக் கவிதைகளும் குப்பையாய் அப்புறப் படுத்தத் தக்கனவே தவிர, இலக்கியப் பேழையில் இடம் பெறா.

பாரதியும் பாரதிதாசனும் கைவந்த கலைஞர்களாய் விளங்குகிறார்கள். யாப்பு அவர்களுடைய கைக்கருவியாய்

அழகாகவும் திறமையாகவும் பாப்புனையப் பயன்படுகிறது. சொற்கள் அழகாகவும் சீராகவும் அமைகின்றன. மிக எளிமையாகப் பின்னப்படுகின்றன. எவ்வித முயற்சியுமின்றி இயல்பாக அமைந்தனபோல் தோற்றமளிக்கின்றன. அதே நேரத்தில் வெண்பா அமைப்பில் சிறிதும் வழுவாது ஒழுங்குற அமைந்துள்ளன.

இயல்பான உணர்ச்சியும் திறமான பயிற்சியும் பின்னி அழகான கவிதை பிறக்கிறது. கடுஞ்சொற்கள் வழக்கிழந்த, சொற்கள் இல்லாமல் நடைமுறையில் உள்ள எளிய சொற்களில், எதுகையும் மோனையும் தேடாமலே வந்து கூடி ஒரு மோகனப்பாட்டை உருவாக்கித் தருகின்றன.

பாட்டின் தொடக்கமே எவ்வளவு எளிமையாகவும் அழகாகவும் அமைந்துள்ளது என்று பார்த்தால் புரியும்.

காலையிளம் பரிதி வீசும் கதிர்களிலே
நீலக் கடலோர் நெருப்பெதிரே சேர்மணிபோல்
மோகனமாம் சோதி பொருந்தி முறைதவறா
வேகத் திரைகளினால் வேதப் பொருள்பாடி
வந்து தழுவும் வளஞ்சார் கரையுடைய
செந்தமிழ்த் தென்புதுவை என்னும் திருநகரின்
மேற்கே சிறுதொலைவில் மேவுமொரு மாஞ்சோலை.
(குயில்)

குயில் கூவிக் கொண்டிருக்கும்; கோல மிகுந்த
மயிலாடிக் கொண்டிருக்கும்; வாசம் உடையநற்
காற்றுக் குளிர்ந்தடிக்கும்; கண்ணாடி போன்ற நீர்
ஊற்றுக்கள் உண்டு; கனிமரங்கள் மிக்க உண்டு;
பூக்கள் மணங்கமழும், பூக்கள்தொறும் சென்றுதே
னீக்கள் இருந்தபடி இன்னிசைபா டிக்களிக்கும்.

வேட்டுவப் பெண்கள் விளையாடப் போவதுண்டு
காட்டு மறவர்களும் காதல்மணம் செய்வதுண்டு
நெஞ்சில் நிறுத்துங்கள் இந்த இடத்தைத்தான்
சஞ்சீவி பர்வதத்தின் சாரல் என்று சொல்லிடுவார்.

(ச. பா. சாரல்)

தேர்ந்த கவிஞனுக்கு இலக்கணம் தடையாய் இருப்ப தில்லை; நல்ல நடையைக் கொடுக்கும் என்பதற்கு இந்த இரு நூல்களுமே சான்று.

பெற்ற குழந்தை மூக்கும் விழியுமாய், பிஞ்சுக்கையும் காலும் பஞ்சுபோல் உடலும் கொண்டு ஒரு பூக்குவியலாய்க் காணும்போது தான் அதன் மீது யாருக்கும் அன்பு பிறக்கும், தாயும் தன் குழந்தை என்று பெருமையோடு தூக்கி மார்பில் அணைத்துக் கொண்டு முத்தமாரி பெய்து சித்தம் களிப் படைவாள்.

அதுவே குறைப்பேறாகி, வெறும் சதைக் கட்டியாய்ப் பிறந்து விட்டால் எந்தத் தாயும் அதை ஏறெடுத்துக் கூடப் பார்க்க மாட்டாள். இப்படியொரு பிண்டம் தன் வயிற்றில் பிறக்க என்ன பாவம் செய்தேனோ என்று துன்புறுவாள்.

ஆனால், இந்தப் புதுக்கவிதைக்காரர்கள் மட்டும், இயற்கைக்கு மாறுபாடாக, அரைகுறைப் பேறுகளைப் படைத்துவிட்டு ஆகா ஓகோ என்று துள்ளாட்டம் போடுவது வேடிக்கையாகத் தான் இருக்கிறது.

முயற்சி யில்லாமலும், பயிற்சி யில்லாமலும் கவிஞர் என்ற பெயரைப் பெற்று விடவேண்டும் என்ற அறியாமையின் வயப்பட்ட இவர்களை எண்ணும்போது பரிதாபமாகத்தான் இருக்கிறது.

பாரதியும் பாரதிதாசனும் புதுமையைப் படைத்தார்களே தவிர, புதுக்கவிதை என்ற கோணல் கவிதைகளைப் படைக்க வில்லை.

அவர்கள் கருத்தில் புதுமையிருந்தது; கற்பனையில் புதுமையிருந்தது; இலட்சியத்தில் புதுமை யிருந்தது; எதையும் எடுத்துச் சொல்லும் போக்கில் புதுமையிருந்தது. புதுமை என்ற பெயரால், பொருந்தாக் கூற்றுகளையும் புல்லிய கருத்துகளையும், வடிவில் அடங்காத துண்டங்களையும் பிண்டங்களையும், பெய்து கழியும் பித்தர் இதனை யுணர வேண்டும.

குயில் பாட்டிலும், சஞ்சீவி பர்வதத்தின் சாரலிலும் காணப்படும் கலிவெண்பாக் கண்ணிகள் நெஞ்சில் ஒட்டிக் கொள்ளும் கவிதை வரிகளாய் உள்ளன.

அவற்றின் நயங்களை இனிக் கூறு கூறாய் ஒப்பிட்டுப் பார்ப்போம்!

# காதல்

*காதல் காதல் காதல்*
*காதல் போயிற் காதல் போயிற்*
*சாதல் சாதல் சாதல்*

இப்படித் தொடங்கும் பத்துப் பாட்டுகளைக் குயில் குக்குக்கூ வென்ற இன்னிசைத் தீம்பாட்டாய்ப் பாடுகிறது. இன்னமுதைக் காற்றினிடை எங்கும் கலந்ததுபோல், மின்னல் சுவைதான் மெலிதாய், மிகவினிதாய் வந்து பரவுதல் போல், வானத்து மோகினியாள் இந்தக் குயில் உருவம் ஈய்தித் தன் ஏற்றம் விளக்குதல்போல் இந்த இன்னிசைத் தீம்பாடல் இருப்பதாகப் பாரதியார் மயக்கந் தரும் மொழியில் எடுத்துரைக்கின்றார்.

குயில் தன் காதலை எடுத்துரைக்கும் பாங்கு மிக அழகாய் அமைந்துள்ளது. மானுடர் பாட்டில் மனத்தைப் பறிகொடுத்துப் பாவலரின் காதலை வேண்டிக் கரைவதாய்க் குயில் கூறுகிறது.

குயில் பாடிய காதல்பாட்டு பாவலரின் உள்ளமாம் வீணைதனில் உள்ள வீடத்தனையும் விள்ள ஒலிப்பதால் வேறோர் ஒலியில்லை என்று, மனம் அந்தப் பாட்டிலேயே மயங்கிக் கிடப்பதைக் கூறுகிறார். குயிலின் உருவம் தன்

மனமெங்கும் நிறைந்திருப்பதைப் பாவலர். கோடி பல கோடி யாய், ஒன்றே யதுவாய் உலகமெலாம் தோற்றமுற்றதாகக் கூறுகிறார்.

நான்காம் நாள்தான் குயில் பாவலரை வரச் சொல்லி யிருக்கிறது. ஆனால், ஒருநாள் போவதே பெரும்பாடாய் விட்டது கவிஞருக்கு.

> நாளொன்று போவதற்கு
> நான்பட்ட பாடனைத்தும்
> தாளம் படுமோ தறிபடுமோ
> யாரறிவார்?

என்று தான்பட்ட பாட்டை விளக்குகிறார்.

தாளம் எழுப்பும் ஒலி கேட்போர் காதுக்கு இன்பம் தருகிறது. பாடும் பாட்டுக்கு அது இனிமை சேர்க்கிறது. ஆனால் கையில் இருக்கும் தாளம் அடிபடுவதை உற்று நோக்கினால் அதன் துடிப்பு விளங்கும். அடிபடுவதும், அதிர் வதும், அடிதாங்காமல் விலகிச் செல்வதும், மீண்டும் அடிபடு வதும், பாட்டு முடியும் வரை அது படும்பாடு உற்றுநோக்கி னால் மிகுந்த உயிர் வாதையாகத் தோன்றும்.

தறியில் ஊடு பாவு இடமும் வலமும் ஓடி ஓடி இடை யறாது சென்று சென்று வரும் காட்சி துன்பத்தால் நெஞ்சு துடிக்கும் துடிப்புக்கு ஒரு சாட்சி.

தாளம் படுமோ தறிபடுமோ என்று மனத்துடிப்பை விளக்கவரும் பாவலரின் கற்பனை நயம் மிகச்சிறந்தது.

மனத் துடிப்புத் தாங்காமல் பொழுது விடிந்தவுடன் சோலையை நோக்கிக் கால்கள் நடைபோடுகின்றன.

மன்மதனார் விந்தையால்
புத்திமனம் சித்தம் புலனொன் றறியாமல்
வித்தைசெயும் சூத்திரத்தின் மேவுமொரு
பொம்மையெனக்
காலிரண்டும் கொண்டு கடுகவுநான் சோலையிலே
நீலிதனைக் காணவந்தேன்.........

என்று தன்னை மறந்து கால் இழுந்துக் கொண்டு போகும் விந்தையைக் கூறுகிறார்.

குரங்கு குயிலின் பாட்டில் மயங்கிக் காதலுற்றுச் செய்யும் சேட்டைகளைக் கவிஞர் அப்படியே குரங்குப் பாணியிலேயே வருணிக்கிறார்.

வற்றற் குரங்கு மதிமயங்கிக் கள்ளினிலே
முற்றும் வெறிபோல் முழுவெறி கொண்டாங்ஙனே
தாவிக் குதிப்பதுவும் தாளங்கள் போடுவதும்
ஆவி யுருகுதடீ ஆஹாஹா என்பதுவும்
கண்ணைச் சிமிட்டுவதும் காலாலும் கையாலும்
மண்ணைப் பிறாண்டி வாரி யிறைப்பதுவும்

என்று அந்தக் குரங்கு காதல் வெறி கொண்டு பேசுவதைப் பாவலர் பாரதியார் கூறும்போது, கண்ணின் முன்னே அந்தக் குரங்கு ஆட்டம் போடும் காட்சி தோன்றுகிறது.

சஞ்சீவி பர்வதத்தின் சாரலிலே குப்பன் வந்து காத்திருக்கின்றான். சொன்னபடி இளவஞ்சி வருவதை எதிர்நோக்கி தென்திசையைப் பார்த்தபடி இருக்கின்றான். அச்சடித்த செப்புச் சிலைபோலே அவன் அவளுக்காக—அவள் வரும் திசையையன்றி வேறு நோக்கின்றிக் காத்திருக்கின்றான். ஆடாமல் அசையாமல் வாட்டத்தோடு காத்திருக்கின்றான். அவள் அவனை நெடுநேரம் கூடக் காக்க வைக்கவில்லை. அவன் வந்து சிறிது நேரத்தில் அவள் வந்து விடுகின்றாள்

அந்தச் சிறிது நேரத்திற்குள் அவன் வாடி விடுகின்றான். அவ்வளவு காதல் அவள் மீது. ஆவலோடு, நெஞ்சில் ஊறிச் சுமக்கின்ற காதலோடு கண்டதும் பாய்ந்தெழுந்து அப்படியே வாரியணைத்துக் கொள்ளத் தாவி வருகின்றான்.

"தொடாதீர்கள்!" என்று அவள் தடைவிதிக்கின்றாள்.

எப்படி யிருக்கும் நெஞ்சு?

திடுக்கிடுகின்றான். இதயக்குரல் ஒலிக்கின்றது. துயரத் தோடு அவளை நோக்கிப் பேசுகின்றான். காதல் மொழிகள் பெருக்கெடுத்துக் கரைதட்டிக் கொண்டு பாய்ந்தோடி வருகின்றன.

கண்ணுக்குள் பாவையே! கட்டமுதை நான்பசியோ
டுண்ணப்போம் போது நீ ஓர் தட்டுத் தட்டிவிட்டாய்!
தாழச் சுடுவெய்யில் தாழாமல் நான்குளிர்ந்த
நீழலைத்தா வும்போது நில்என்று நீதடுத்தாய்!
தொட்டறிந்த கையைத் தொடாதே என்றாய் நேற்றுப்
பட்டிருந்த தேகசுகம் விட்டிருக்கக் கூடுவதோ?

என்று வேதனையோடு கேட்கின்றான்.

அவளோ, சஞ்சீவி மலையின் உச்சிக்கு அழைத்துச் சென்று மூலிகைகளைப் பறித்துக் கொடுக்குமுன் தன்னைத் தொடக்கூடாது என்று கட்டுப்பாடு விதிக்கின்றாள்.

புதுமைப் பெண்ணான அவளை வலியத் தழுவிக் கொள்ள வகையற்ற குப்பன் அவளைக் கெஞ்சுகின்றான்.

ஒரு முத்தமாவது கொடு என்று கேட்கிறான். மூலிகையைப் பறித்துக் கொடுத்தால் நூறு முத்தம் உறுதி யாகக் கிடைக்கும்; அதற்குமுன்னே ஒன்று கூடக் கிடைக்காது என்று உறுதியாகச் சொல்லி விடுகிறாள்.

மூலிகைக்குப் பக்கத்தில்
முத்தம் கிடைக்கும்

என்று கட்டுப்பாடு விதிக்கிறாள். இவளிடம் கெஞ்சியும் பயனில்லை; மிஞ்சவும் முடியாது என்ற நிலையில் குப்பன் மலையின் உச்சியை நோக்குகிறான். மலைப்பாய் இருக்கிறது. உச்சிக்குப் போய்ச்சேர எவ்வளவு நேரம் ஆகும்; அதுவரை எப்படிப் பொறுப்பது என்று துடிக்கிறான். அவனுடைய மலைப்பைக் கண்டு அவள் ஏளனமாய் நோக்குகிறாள்.

குப்பன் கொண்டிருந்த காதல் வேகம் அவனைப் பறக்கச் செய்கிறது. அவளைத் தூக்கிக் கொண்டு மலையின் மேல் பாய்ந்து ஏறுகின்றான். அவளை நடக்க வைத்துக் கூட்டிச் சென்றால் நேரம் கடந்துவிடும் என்று தூக்கிக் கொண்டு பறக்கிறான். அவனுடைய வேகத்தைப் பாவலர் கூறும் அடிகளே வேகமாய்ப் பறக்கின்றன.

கிட்டரிய காதல்
கிழத்தி இடும்வேலை
விட்டெறிந்த கல்லைப்போல்
மேலேறிப் பாயாதே!
கண்ணின் கடைப்பார்வை
காதலியர் காட்டிவிட்டால்
மண்ணில் குமரருக்கு
மாமலையும் ஓர்கடுகாம்!
மாமலைதான் சென்னி வளைந்து
கொடுத்ததுவோ
நாமலைக்கக் குப்பன்
விரைவாய் நடந்தானோ
மங்கையினைக் கீழிறக்கி
மாதே! இவைகளே
அங்குரைத்த மூலிகைகள்
அட்டியின்றிக் கிள்ளிக்கொள்
என்றுரைத்தான்.

காதலின் வேகத்தைக் குப்பனின் செயலிலே காட்டும் இந்த வரிகள், படிக்கும்போதே வேகத்தை உணர்த்தி நிற்கின்றன.

ஓர் இளைஞனுக்கு ஒரு மங்கையிடம் ஏற்பட்ட மாசு மருவற்ற காதலை—அவளுக்காகத் தான் எதுவும் செய்யச் சித்தமாயிருக்கும்—ஈடுபாட்டை அருமையாக விளக்குகின்றன இந்தக் கவிதை வரிகள்.

இலக்கியங்களிலும் சரி, நடைமுறை வாழ்க்கையிலும் சரி காதல் ஏற்பட்டபின் அந்தக் காதலுக்காக எதையும் செய்யத், துடிக்கும் துடிப்பு ஆண் பெண் இருபாலாரிடையேயும் காணப் படுகிறது. ஆனால் காதலுக்கு அடிமைப்படும் போக்கு ஆண் களிடம் மட்டுமே காணப்படுகிறது. தம்மேல் இச்சை கொண்ட ஆடவரைத் தம் கருத்துப்படி நடத்துகின்ற வல்லமையைப் பெண்கள் எப்படியோ பெற்று விடுகிறார்கள்.

தன்மேல் அன்பு வைத்த ஆணிடம் தனக்கு வேண்டியதை எல்லாம் கேட்டுப் பெற்றுக் கொள்ளும் ஆற்றல் அல்லது திறமை பெண்களிடம் இயல்பாகவே அமைந்திருக்கிறது. ஆண்களோ, காதல் வயப்பட்டபின், அவளுக்கு மனநிறைவு தர எதையும் செய்யச் சித்தமாய் இருக்கும் அடிமைகளாய் மாறி விடுவார்களே தவிர, அவளிடமிருந்து எதையும் கேட்டுப் பெறும் மனப்பான்மை பெறுவதே இல்லை.

பொருளாசை யில்லாத பெண்கள், தம்மேற் காதல் கொண்டவர்களைத் தம் கருத்துப்படி யாட்டிப் படைப்பார் கள். தாம் சொன்ன செயல்களைச் செய்து முடிக்கும்படி கட்டளையிடுவார்கள். அன்புக் கட்டளை யென்று அதை நிறைவேற்ற ஆண்கள் பறந்து கொண்டிருப்பார்கள். பொது வாக, காதல் என்று ஒன்று ஏற்பட்டுவிட்டால் அங்கே பெண்

கள் ஆட்சி செலுத்துவதும். ஆண்கள் ஆட்பட்டு நிற்பதுமே பெரும்பாலும் தொன்றுதொட்டு நிகழும் கூற்றாய் இருக்கிறது.

குயில் தன்னைக் காதலிக்கும் பாவலனைத் தன்னையே நினைந்துருகும் வண்ணம் செய்து விடுகிறது. அதுபோலவே தன்னைக் காதலிக்கும் நெட்டைக் குரங்களையும், மாடனை யும் வயப்படுத்தி விடுகிறது.

காதலிக்கும் பாவலனை நான்காம் நாள் வருமாறு கூறு கிறது குயில். நான்காம் நாள் என்ன நாளையே வருகிறேன் என்று சொல்லத் தோன்றவில்லை பாவலனுக்கு. அது சொன்னதைக் கேட்டுக் கொண்டு திரும்புகிறான். ஆனால், நான்கு நாள் பொறுத்திருக்க முடியாமல் மறுநாளே காணப் புறப்பட்டு விடுகின்றான்.

குயில் தன் இசையால் மட்டுமன்றித் தன் திறமையான பேச்சாலும் பாவலனை அடிமைப் படுத்திவைக்கிறது.

அது காளை மாட்டையும் குரங்கையும் கண்டு காதல் மொழி பேசுவதைக் கேட்டு ஆத்திரமடைந்து வாளால் கொல்லக் கருதி வீசமுற்பட்ட போதும்கூட, பாவலன் அதன் காதலுக்கு மீறி நடக்க முடியவில்லை.

தனக்குப் போட்டியாய் வந்த இருவர் மீது காதல் செலுத்தும் குயிலைக் கண்டதுண்டமாய் வெட்டிப்போட நினைத்தாலும், மீண்டும் மீண்டும் அதன்மேல் பித்தாகி அதைத் தேடிச் செல்லும் பாவலனை நோக்கும்போது, அவன் கொண்ட காதல், அவனை மீளா அடிமையாக்கி விட்டதை யுணர முடிகிறது.

நான்காம் நாளும் குயில் தன்முற்பிறப்புக் கதையைக் கூறி அவனை மேலும் தன்வயப் படுத்துகிறது.

பொதுவாகவே, காதல் என்று வந்துவிட்டால் பெண்கள் அரியணையில் ஏறிக் கொள்வதும், ஆண்கள் இட்ட வேலையைச் செய்யும் அடியவர்கள் ஆவதும் உலகியற்கை போலும்.

சஞ்சீவி மலைச் சாரலில் வஞ்சியைக் காதலிக்கும் குப்பனும் அப்படித்தான் இருக்கிறான்.

எப்படியாவது அவள் தன் மேல் தயவு காட்டினால் போதும் என்ற நிலையில் குப்பன் இயங்குகின்றான்.

மலைச் சாரலில் ஆவலோடு காத்திருக்கின்றான். வஞ்சி எப்போது வருவாள்; இன்பம் தருவாள் என்று அவன் நெஞ்சு ஏங்குகின்றது.

சற்றே தாழ்த்து வருகிறாள். அந்தச் சற்று நேரம்கூட அவனால் பொறுக்க முடியவில்லை.

இப்படி உயிரையே வைத்திருக்கும் அவனை அவள் வந்தவுடன் "தொடாதீர்கள்" என்று தடைபோடுகிறாள்.

அதிர்ந்து போகிறான் குப்பன். கெஞ்சுகிறான். பசியோடு இருக்கிறேன். கட்டுச் சோறுபோல நீ அருகில் கிடைத்தாய்! ஆனால் அந்தக் கட்டுச் சோற்றை யுண்ணக் கூடாதென்று தட்டி விடுகிறாயே! நீதியா நியாயமா? என்று ஏங்குகின்றான்.

ஆவல் என்னும் வெயில் பொறுக்க முடியாமல் இருந்தேன். ஆலமரத்து நிழல் போல உன்னைக் கண்டேன். நிழலுக்கு வராதே என்று நிறுத்திவிட்டாயே! நெறிதானா என்று அறங்கேட்கின்றான்.

நேற்று அன்பாகத்தானே இருந்தாய்? இன்றென்ன சினம்? என்று காரணம் புரியாமல் தவிக்கிறான்.

மூலிகையைப் பறித்துக் கொடுத்தால்தான் நான் உயிரோடு இருப்பேன் என்று வஞ்சி முரண்டு பிடிக்கிறாள்.

பேச்சுக்கள், கோபங்கள், சமாதானங்கள் என்னென்னவோ நடைபெறுகின்றன.

இறுதியில் மூலிகையைப் பறித்துத்தர உடனே அழைத்துச் செல்வதாக உறுதி கொடுக்கின்றான்.

அழைத்துச் சென்று மூலிகையைப் பறித்துக் கொடுத்தால் நூறு முத்தங்கள் தருவதாக அவள் வாக்களிக்கின்றாள்.

அச்சாரமாக ஒரு முத்தம் கேட்கின்றான்.

சாதனைக்காரி அவள்.

மூலிகைப் பக்கத்தில்தான் முத்தம் கிடைக்கும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்து விடுகிறாள்.

வேறு வழியில்லை குப்பனுக்கு.

அழைத்துச் செல்கிறான். இல்லை. நடந்து சென்றால் நேரம் ஆகுமென்று தூக்கிச் செல்கின்றான். மூலிகைச் செடியருகில் இறக்கி விடுகின்றான்.

மூலிகை தரும் அதிசயத்தில் ஈடுபட்டுத் தன் காதல் வேட்கையை மறந்து விடுகின்றான் குப்பன்.

மூலிகைக் காட்சியால் குப்பன் பகுத்தறிவு பெறுகிறான். தெளிந்தவனாகி விடுகின்றான்.

மீண்டும் காதல் உணர்வு தலையெடுக்கிறது.

கதிரவன் மேற்றிசையில் இறங்கும் காட்சி பார்! மாலையழகுபார்! அன்னம் பேடுதேடும் அழகுபார்! என்னைப்பார்! என் நெஞ்சை உன் நெஞ்சு ஆக்கிப்பார்! என்று வேட்கையோடு அழைக்கின்றான்.

'மூலிகைக்குப் பக்கத்தில், உமைத்தழுவி நோகாமல் நூறு முத்தங்கள் தருவேன்' என்று சாரலிலே வாக்களித்தவள், இப்போது என்ன சொல்கிறாள். 'சாரல்தான் காதலுக்குத் தக்க இடம்; அங்கே போவோம்' என்கிறாள்.

பாவம் குப்பன்!

இவ்வளவு பொறுத்தோம்; இன்னும் சற்றுப் பொறுப் போம் என்று அடங்கிப் போகிறான்.

சாரலுக்கு மீண்டும் இறங்கி வந்தவுடன் வஞ்சி மேலும் அவன் பொறுமையைச் சோதிக்கவில்லை.

"அன்பு மிகுந்தே அழகிருக்கும் நாயகரே! இன்பமும் நாமும் இனி" என்று குப்பன் மனங்களிக்கக் கூடுகிறாள். நெஞ்சு முழுமையாக நிறைவெய்துகிறது.

கதை முடியும் போது சுவைஞர்களுக்குப் பலவிதமான நிறைவுகள் ஏற்படுகின்றன.

ஒரு நல்ல காதல் கதையைப் படித்தோம் என்ற மன நிறைவு.

அறிவுத் தெளிவு ஏற்படுத்தும் ஒரு புதுநெறிபரப்பும் இலக்கியத்தைப் பெற்றோம் என்ற மனநிறைவு.

தூய காதல் உணர்வுகளை அழகிய கவிதைக் கண்ணி களிலே வடித்துக் கொடுக்கும் ஓர் இலக்கியப் படைப் பாளியைத் தமிழகம் பெற்றதே என்ற மனநிறைவு.

துன்பியலாக இல்லாமல் கதை இன்பியலாக முடிந்த தனால், இயல்பாக ஏற்படும் மனநிறைவு.

புதிய பல உவமைகளை—இனிய சொல்லாட்சிகளை—நெஞ்சில் நிலைத்து நிற்கும் நாடகக் காட்சிகளை படிக்கும் போதே மனக்கண்முன் நிறுத்தும் நிகழ்ச்சிகளைக் கண்டு களித்து மனநிறைவு கொள்ளுகின்றோம்.

# கிண்டற்சுவை

குயில் பாட்டிலே பாரதியார் மனிதர்களை அழகாகக் கிண்டல் செய்கிறார். குயில் நெட்டைக் குரங்கனாகிய வானரத்தைப் புகழும்போது, மனிதர்களை ஏளனமாகப்பேசி வானரத்தை யுயர்த்திப் பேசும் பகுதிகள் மிகச் சுவையாக அமைந்துள்ளன.

மாயக்குயிலின் கிண்டல் மொழிகள் அதன்மீது சினம் ஏற்படுத்துவதற்குப் பதிலாக அதன் திறனை வியந்து போற்றவே செய்கின்றன.

மண்ணில் உயிர்க்கெல்லாம் தலைவரென மானிடரே
எண்ணிநின்றார் தம்மை; எனிலொருகால் ஊர்வகுத்தல்
கோயில் அரசு குடிவகுப்புப் போன்ற சில
வாயிலிலே அந்த மனிதர் உயர்வெனலாம்.

நாகரிகத்தில் மனிதர் உயர்ந்தவர்தாம் என்று உண்மையை ஒப்புக்கொண்ட குயில் இனிமேல் தான் தன் கிண்டலைத் தொடங்குகிறது.

மேனி யழகினிலும் விண்டுரைக்கும் வார்த்தையிலும்
கூனி யிருக்கும் கொலுநேர்த்தி தன்னிலுமே
வானரர்தம் சாதிக்கு மாந்தர்நிக ராவாரோ!

கேட்டுக் கொண்டிருக்கும் குரங்குக்கு இன்பபோதை தலைக்கேறுகிறது. குயில் தொடருகிறது;

ஆனவரையும் அவர்முயன்று பார்த்தாலும்
பட்டு மயிர் மூடப் படாத தமதுடலை
எட்டுடையால் மூடி எதிருமக்கு வந்தாலும்
மீசையையும் தாடியையும் விந்தை செய்து வானரர்தம்
ஆசை முகத்தினைப் போல் ஆக்க முயன்றிடினும்
ஆடிக் குதிக்கும் அழகில் உமை நேர்வதற்கே
கூடிக் குடித்துக் குதித்தாலும், கோபுரத்தில்
ஏறத் தெரியாமல் ஏணிவைத்துச் சென்றாலும்
வேறெத்தைச் செய்தாலும், வேகமுறப் பாய்வதிலே
வானரர்போல் ஆவாரோ? வாலுக்குப் போவதெங்கே
ஈனமுறுங் கச்சை இதற்கு நிகராமோ?
பாகையிலே வாலிருக்கப் பார்த்ததுண்டு, கந்தைபோல்
வேகமுறத் தாவுகையில் வீசி எழுவதற்கே
தெய்வங் கொடுத்த திருவாலைப் போலாமோ?
சைவசுத்த போசனமும் சாதுரியப் பார்வைகளும்
வானரர்போற் சாதியொன்று மண்ணுலகின் மீதுளதோ?

என்று அந்த மாயக் குயில் மானிடரைக் கிண்டல் செய்து குரங்கைப் புகழ்ந்து அதன் காதலுக்கு ஏங்கித் தவிப்பதாகப் பாடுகிறது உண்மையில் இது குரங்கையே கிண்டல் செய்வது போல் இல்லையா? மதியில்லாத குரங்கு, தன்னைப் பாராட்டுவதாக நினைத்துக் கொண்டு ஆட்டம் போடுகிறது.

மானிடரைவிடத் தான் உயர்ந்தவன் என்ற எண்ணம் வந்ததும் அது குடிகாரன் போல் ஆடத் தொடங்கிவிடுகிறது. அவ்வளவு புகழ்ப்போதை!

இந்தக் குயில் காளை மாட்டைப் பார்த்துக் காதல் மொழி பேசும் போது உண்மையிலேயே மாட்டை யுயர்த்திப் புகழ்கிறது. மாட்டைப் புகழும்போது மானிடரை இகழ்கின்றது. அந்தச் சொற்கள் உண்மையிலேயே மானிடரைப் பழிப்பதாய் உள்ளது. அங்கே கிண்டல் எதுவும் காணப்பட

வில்லை. முற்பிறப்பில் மாலையிட நினைத்த மணவாளன் என்பதால் மாட்டைக் கிண்டல் செய்ய மனம் வர வில்லையோ? மாட்டைப் புகழும் மொழிகள் அற்புதமாக அமைந்துள்ளன. கற்பனை மிக நயமாக வெளிப்படுகின்றது.

நந்தியே,
பெண்டிர் மனத்தைப் பிடித்திழுக்கும்
காந்தமே!
காமனே மாடாகக் காட்சிதரு
மூர்த்தியே!

பூமியிலே மாடுபோற்
பொற்புடைய சாதியுண்டோ?
மாணிடரும் தம்முள்
வலிமிகுந்த மைந்தர்தமை
மேனியுறும் காளையென்று
மேம்பாடுறப் புகழ்வார்.

நீள முகமும் நிமிர்ந்திருக்கும் கொம்புகளும்
பஞ்சுப் பொதிபோற் படர்ந்த திருவடிவும்
மிஞ்சு புறச்சுமையும் வீரத் திருவாலும்
வானத்திடிபோல 'மா' வென் றுறுமுவதும்
ஈனப் பறவை முதுகின்மிசை யேறிவிட்டால்
வாலைக் குழைத்து வளைத்தடிக்கும் நேர்மையும், பல்
காலம் நான் கண்டு கடுமோக மெய்திவிட்டேன்

இவ்வாறு மாட்டைப் புகழ்ந்துரைத்த குயில், தான் மாட்டுடன் எவ்வாறு கூடி வாழப் போகிறது என்பதைக் கூறுகிறது. அங்கே தான் மானிடரைப் பழிக்கிறது.

மானுடராம் பேய்கள் வயிற்றுக்குச் சோறிடவும்
கூனர்தமை யூர்களிலே கொண்டு விடுவதற்கும்
தெய்வமென நீருதவி செய்தபின்னர், மேனிவிடாய்
எய்தியிருக்கும் இடையினிலே பாவியேன்

வந்துமது காதில் மதுரவிசை பாடுவேன்
வாலி லடிபட்டு மனமகிழ்வேன் 'மா' வென்றே
ஓடிடும்நும் பேரொலியோ டொன்றுபடக் கத்துவேன்
மேனியிலே உண்ணிகளை மேவாது கொன்றிடுவேன்
காவிடையே சுற்றிக் கழனியெலாம் மேய்ந்து நீர்
மிக்க வுணவுண்டு வாய் மென்றசைதான் போடுகையில்
பக்கத் திருந்து பலகதைகள் சொல்லிடுவேன்!

காளை மாட்டோடு சேர்ந்து கானக்குயில் வாழ்க்கை நடத்தவுள்ள முறை மிகச் சுவையாக உள்ளதல்லவா?

மாட்டையும் குரங்கையும் புகழ்வதற்காக மானிடரைக் கிண்டல் செய்யும் குயிலின் மாயப் பேச்சுகளைக் கேட்ட பிறகு, சஞ்சீவி மலைக்குப் போனால், அங்கே மூலிகையின் மூலம் உலகின் பல பகுதியினரும் பேசுவதைக் குப்பனும் வஞ்சியும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இங்கிலாந்து தேசத்தில் இருந்து ஒருவன் பேசுவது காதில் விழுகிறது. இருவரும் கவனிக்கிறார்கள்.

வெள்ளைக்காரன் நம்மை ஆண்டு கொண்டிருக்கிறான். காந்தியடிகள் தலைமையில் அவன் ஆட்சியை அகற்ற அறப் போர் நடத்திக் கொண்டிருக்கிறோம். பகவத்சிங், வாஞ்சி நாதன் போன்ற வீரர்கள் வெள்ளையரைச் சுட்டுக் கொன்று தான் சுதந்திரம் பெறவேண்டும் என்று இரகசிய ஆயுதப் புரட்சிகளில் ஈடுபடுகிறார்கள். நேதாஜி அன்னிய ஜப்பானியர், செருமானியர் உதவியுடன் பாரதத்தை மீட்கப் படைதிரட்டி வருகிறார். இப்படி யாளுக்கொரு முறையில் சுதந்திரப் போராட்டம் நடந்து கொண்டிருக்கும் நேரத்தில் இங்கிலாந்து தேசத்துக்காரன் ஒருவன்—நம்மை அடிமைப் படுத்தி வைத் திருக்கும் வெள்ளைக்காரன் ஒருவன்—பேசுவது காதில் விழுகிறது. குப்பனும் வஞ்சியும் கவனமாய்க் கேட்கிறார்கள். வெள்ளைக்காரன் இங்கிலாந்து நாட்டில் வெள்ளைக் காரர் கள் மத்தியில் சொற்பொழி வாற்றுகிறான்.

ஓ! என் சகோதரரே! ஒன்றுக்கும் அஞ்சாதீர்
நாவலந்தீவு நம்மைவிட்டுப் போகாது.

எவ்வளவு உறுதியாகச் சொல்லுகிறான். சுரண்டுவதற்கும், அடிமைகளாய்க் கூலிகளாய் வேலைவாங்குவதற்கும் ஏற்ற ஒரு நாட்டை யிழந்துவிடுவோமோ என்று பயப்படுகிறீர்களா? பயப்படத் தேவையில்லை. ஏனென்றால்,

வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி மக்களென்றால்
சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும்
ஆகையால் எல்லாரும் அங்கே தனித்தனிதான்
ஏக மனதாகி அவர் நம்மை எதிர்ப்பதெங்கே?

பேதங்கள் பல இருக்கும்போது அவர்கள் ஒன்று சேர்ந்து போராடி நம்மை எதிர்த்து விரட்டி யடிக்க முடியாது. மேலும் மேலும் பேதம் வளர்த்துக் கொண்டேயிருக்க அங்கே இரண்டு சக்திகள் உள்ளன. அவை யிருக்கும்வரை நமக்குக் கவலையில்லை. அவை என்ன?

பேதம் வளர்க்கப் பெரும்பெரும் புராணங்கள்!
சாதிச் சண்டை வளர்க்கத்தக்க இதிகாசங்கள்!

இவை மட்டுமல்ல, மக்களை மடையர்களாகவே ஆக்கி— நிரந்தரமாய் அடிப்படுத்தி வைத்திருக்க பூசுரர்கள் இருக்கின்றார்கள்.

கட்டிச் சமூகத்தின் கண்ணவித்துத் தாமுண்ணக்
கொட்டி யளக்கும் குருக்கள் கணக்கற்றார்.
தேன்சுரக்கப் பேசி இந்து தேசத்தைத் தின்னுதற்கு
வான்சுரரை விட்டுவந்த பூசுரரும் வாழ்கின்றார்.

சேறுபோல் சூழ்ந்திருக்கும் இந்தச் சிக்கலிலே மாட்டிக் கொண்டிருக்கும் இந்திய மக்கள், இந்தச் சேற்றிலிருந்து கரையேறி நம்மை எதிர்த்து விரட்டுவது என்பது நடக்காத காரியம் என்று ஆங்கிலேயன் கூறுகிறான்.

இந்த உளைச்சேற்றை, ஏறாத ஆழத்தை
எந்தவிதம் நீங்கி நமை எதிர்ப்பார்? இன்னமும்
சிந்தனா சக்தி சிறிதுமின்றி மக்களுக்குத்
தம்தோள் உழைப்பிலே நம்பிக்கை தானுமின்றி
ஊறும் பகுத்தறிவை இல்லா தொழித்துவிட்டுச்
சாறற்ற சக்கையாய்ச் சத்துடம்பைக் குன்றவைத்துப
பொற்புள்ள மாந்தர்களைக் கல்லாக்கியே அந்தக்
கற்கள் கடவுள்களாய்க் காணப்படும் அங்கே!
இந்த நிலையில் சுதந்திரப் போரெங்கே?
கொந்தளிப்பில் நல்லதொரு கொள்கை முளைப்ப
தெங்கே?

கல்வியறிவு, பகுத்தறிவு, சிந்தனாசக்தி சிறிதும் இல்லாத மக்கள் எடுப்பார் கைப்பிள்ளையாய் எது நன்மை எது தீமை என்று தெரியாதவர்களாய் மூடக்கருத்துக்களை நம்பி—சுதந்திர சிந்தனை யில்லாமல் இருக்கும் வரையில் அன்னியரை எதிர்த்து விரட்டி உரிமை பெறுவார்கள் என்று எதிர் பார்க்க முடியாது. இந்தக் கருத்தைக் கூறிய ஆங்கிலேயன் மேலும் சொல்லுகிறான்.

தேகம் அழிந்துவிடும் சுற்றத்தார் செத்திடுவார்
போகங்கள் வேண்டாம்; பொருள் வேண்டாம்
மற்றுமிந்தப்
பாமுலகம் பொய்யே பரமபதம் போஎன்னும்
தாழ்வகற்ற எண்ணுங்கால் சாக்குருவி வேதாந்தம்!
சாதிப் பிரிவு சமயப் பிரிவுகளும்
நீதிப் பிழைகள் நியமப் பிழைகளும்
மூடப் பழக்கங்கள் எல்லாம் முயற்சிசெய்தே
ஓடச் செய்தால் நமையும் ஓடச்செய்வார் என்பேன்.

இவ்வாறு ஆங்கிலேயன் கூறி முடிக்கின்றான்.

குயில் குரங்கையும் மாட்டையும் புகழ்ந்து மாந்தர் இனத்தைக் கிண்டல் செய்கிறது. ஆங்கிலேயன், இந்திய மக்கள் நிலையை எடுத்துக் கூறிக் கிண்டல் செய்கிறான்.

இந்தக் கிண்டல் மொழிகளைக் கேட்டு வஞ்சியும் குப்பனும், துன்புறுகின்றனர். ஆனால் அதிலேயும் வஞ்சிக்கு ஒரு மகிழ்ச்சி. நம் நாடு உள்ள நிலையை இப்போதாவது சிந்தித்து அறிய முடிந்ததே என்பதுதான்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் மேயோ என்ற வெள்ளைக் காரி யொருத்தி இந்தியாவுக்கு வந்து இமயம் முதல் குமரி வரை சுற்றிப் பார்த்து, நம் மக்களிடம் பரவியுள்ள அறியாமை, மூடநம்பிக்கை, சாதிப்பிரிவுகள், மூடச் சடங்கு கள், பிற்போக்கான பழக்க வழக்கங்கள், ஏற்றத் தாழ்வான சமுதாய அமைப்பு முறை, மதமும் சாதியும் கொண்டுள்ள தீய ஆதிக்கம், பூசுரர்கள் மக்களை ஒடுக்கி வைத்திருந்த முறைகள் அனைத்தையும் ஒன்று விடாமல் எழுதினாள். அதைக் கண்ட நம் மேல்சாதித் தலைவர்கள் மேயோ இந்தியாவில் உள்ள குப்பைகளை மட்டுமே திரட்டியிருக் கிறாள். மேன்மைகளும் நன்மைகளும் அவள் கண்ணில் படவேயில்லை என்று மறுப்பு எழுதினார்கள். ஆனால், அவள் சுட்டிக் காட்டிய குப்பைகளை நீக்க முயன்றார்களா என்றால், இன்றுவரையிலும் இல்லை என்றே கூறலாம். அவள் சுட்டிக் காட்டியது தான் அவர்களுக்குக் குற்றமாகப் பட்டதே தவிர, அதை நீக்கி நாட்டில் புத்துணர்ச்சியும், புது வாழ்வும் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் பிறக்கவே இல்லை. பெரியாரும் அம்பேத்காரும் தான், மேயோ திரட்டிய குப்பைகளை யகற்ற வேண்டும் என்றும், தீயிட்டுப் பொசுக்க வேண்டும் என்றும் பிரசாரம் செய்தார்கள். பெரியார் குப்பைகளைக் கொளுத்தியே விழிப்புணர்வைத் தூண்டினார். பெரியார் வழியில் புரட்சிக் கவிஞர் பாரதி

தாசனும் தன் பங்குக்கு இந்தத் தொண்டுகளை இடைவிடாது முழுக்க முழுக்கத் தீவிரமாகச் செய்தார்.

குயில் பாட்டு இலக்கியம் என்ற அளவிலேதான் சுவை கூட்டுகிறது. சஞ்சீவி மலைப்பாட்டு நாட்டு மக்களுக்கு விழிப்புணர்வு தேவை என்ற கருத்தையும் எடுத்துக் காட்டுவ தாக அமைகிறது.

# மெய்யுணர்தல்

நான்காம் நாள் பாவலர் குயிலைச் சந்திக்கிறார். பொய்மாயக் குயில் காதல் பாட்டுப் பாடுகிறது. "ஆசைக் குரங்கினையும் அன்பார் எருதினையும் எண்ணி நீ பாடும் இழிந்த புலைப்பாட்டை நீசக்குயிலே, நான் கேட்கவா வந்தேன்?" என்று கேட்கிறார்.

குயில் பாவலரிடம் மட்டுமல்லாமல் குரங்கிடமும் மாட்டிடமும் காதல் உரையாடியதை மறுக்கவில்லை. ஆனால், அது விதியின் பயன் என்று கூறுகிறது. அதை மெய்ப்பிக்க அது தன் முன்பிறப்புக் கதையைக் கூறுகிறது.

குயில் ஒரு மாஞ்சோலையில் ஏதோ தனியாகச் சிந்தித்துக் கொண்டிருக்கும் வேளையில் முக்காலமும் உணர்ந்த முனிவர் ஒருவர் அச்சோலைக்கு வருகை புரிகிறார்.

அவர் காலில் விழுந்து வணங்கி தன் நிலைமைக்கு விளக்கம் கேட்கிறது. அற்பமான பறவைச் சாதியில் பிறந்த எனக்கு எல்லா மொழியும் புரிவது ஏன்? மானிடர்போல் நான் சிந்தனை பெற்றது எப்படி? என்று முனிவரைக் குயில் கேட்டது.

முனிவர் அதன் முன் பிறப்பு பற்றி எடுத்துரைக்கிறார்.

குயிலே, முன்பிறப்பில் வீரமுருகன் என்ற வேடர் தலைவன் மகளாகப் பிறந்தாய். அப்போது உன் பெயர்

சின்னக் குயிலி. வேடர் குலத்தில் உனக்கொரு மாமன் மகன் இருந்தான். அவன் உன்பால் மையல் கொண்டிருந்தான். அவன் மையலுக்கு இரங்கி நீ அவனை மணந்து கொள்ள ஒப்பினாய். ஆனால் உனக்கு அவன்மேல் காதல் கிடையாது.

உன் அழகைக் கேள்விப்பட்டு தேன்மலை வேடர் தலைவன் மொட்டைப் புலியன், தன்மகன் நெட்டைக்குரங்கனுக்கு உன்னைப் பெண் கேட்டான். உன் தந்தை அதற்கு ஒப்புக் கொண்டுவிட்டான்.

இதைக் கேள்விப்பட்ட மாடன் உன்னிடம் வந்து கோபித்துக் கொண்டான். கோபம் கொள்ளாதே மாடா, அப்பா பேச்சை நான் தட்ட முடியாது. நெட்டைக் குரங்கனுக்கு மனைவியாய்ப் போனாலும் மூன்று மாதத்தில் அவனுடன் சண்டை போட்டுக் கொண்டு வந்து விடுகிறேன். பிறகு உன்னை மணந்து கொள்கிறேன் என்று சொன்னாய். அப்போதும் உன் மாமன் மகன்மேல் காதல் கொண்டு நீ இப்படிச் சொல்லவில்லை. அவன்மேல் உள்ள இரக்கத்தால் தான் இப்படிக் கூறினாய்

ஒரு நாள் காட்டில் நீ தோழியருடன் விளையாடிக் கொண்டிருக்கும்போது, சேர இளவரசன் வேட்டைக்கு வந்தான். சேர இளவரசனும் நீயும் உண்மையாக ஒருவரையொருவர் காதலித்தீர்கள். ஆவி கலந்து விட்டீர்கள். இருந்தாலும் நீ ஏற்றத்தாழ்வை எடுத்துரைத்து மறுத்தாய். சேர மகன் உன்னையே திருமணம் செய்து கொள்வதாக உறுதி கூறினான். அதன் பிறகு நீ நாணந்தவிர்ந்து அவனைக் கூடி நின்றாய். இருவரும் ஆரத்தழுவி இதழ்பருகிக் கொண்டிருக்கும் வேளையில் நெட்டைக் குரங்கன் பார்த்து விட்டான். அவனைத் தேடிக் கொண்டுவந்த மாமன்மகன் மாடனும் பார்த்துவிட்டான்.

ஆவிக் கலப்பின் அமுத சுகந்தனிலே
மேவியங்கு மூடி இருந்த விழிநான்கு
ஆங்கவற்றைக் கண்டமையால் ஆவியில் தீப்பற்றி
ஓங்கும் பொறிகள் உதிர்க்கும் விழிநான்கு

மாடனும் குரங்கனும் ஆத்திரத்தோடு ஓடிவந்து இளவரசனை வாளால் வெட்டினார்கள். முதுகில் வாள் பாய்ந்ததும் துள்ளி எழுந்த மன்னர் மகன் இரண்டு வீச்சில் அவர்கள் இருவரையும் வெட்டி வீழ்த்தினான். ஆக மூவரும் அக் கணமே பிணமாய் விழுந்தார்கள்.

நீ மன்னர் மகனை வாரியெடுத்து மடியில் வைத்துக் கொண்டு புலம்பினாய். மறுபிறவியில் உன்னுடன் கலந்து வாழ்வதாக உறுதி கூறி உயிர் விட்டான் சேர இளவரசன். அவன் இப்போது ஓர் மானிடனாய்த் தோன்றியுள்ளான். உன்னை அடைவான் என்றார் முனிவர்.

இவ்வாறு முனிவர் கூறியதைக் கேட்டுக் குயில் கேட்கிறது! சாமீ, குயிலாக இருக்கும் நானும், மானிடராக இருக்கும் அவரும் எப்படி வாழ்க்கை நடத்துவது? அதற்கு முனிவர் சொல்வார்:

இந்தப் பிறவியிலும் நீ ஓர் வேடர் மகளாகத்தான் பிறந் தாய். ஆனால் பேயாய் அலைகின்ற மாடனும் குரங்கனும் உன்னைக் கண்டு கொண்டார்கள். அதனால் மாயம் செய்து உன்னைக் குயிலாக்கி, பின்தொடர்ந்து திரிகின்றார்கள். அவர்கள் செய்யும் மாயத்தால், உன் காதலர் உன்மேல் ஐயுறுவார். ஆனால் பின்னால் நடப்பதெலாம் நீ பிறகு தெரிந்து கொள்வாய். எனக்கு ஜபம் செய்யும் நேரமாகி விட்டது என்று கூறி அவசரமாக முனிவர் போய்விட்டார்.

இதுதான் உண்மை. என்னை ஏற்பதும் ஏற்காததும் உங்கள் விருப்பம் என்று கூறிப் பாவலரின் கையில் வந்து விழுகிறது குயில்.

மோக வெறி மூளப் பாவலர் அந்தக் குயிலை முத்தமிடு கிறார். அது தெய்வ அழகுமிக்க பெண்ணாக மாறிவிடு கிறது.

கவிதைக் கனிபிழிந்து
பண் கூத் தெனும் இவற்றின்
சாரமெலாம் ஏற்றி
அதனோடே
இன்னமுதைத் தான் கலந்து
காதல் வெயிலிலே
காயவைத்த கட்டியினால்
மாதவளின் மேனி வகுத்தான் பிரமன்

என்று களிகொண்டு அவளைக் கண்டு தழுவி முத்தமிட்டு முத்தமிட்டு மோகப் பெருமயக்கில் சித்த மயங்கிச் சில போதிருக்கையிலே பாவை, சோலை யெல்லாம் மறைந்து விடுகிறது. கனவு கலைந்து, தன் அறையில் புத்தகங்களுக்கு மத்தியில் இருப்பதை யுணர்கிறார் பாவலர்.

சோலை குயில் காதல் சொன்னகதை யத்தனையும்
மாலை யழகின் மயக்கத்தால் உள்ளத்தே
தோன்றிய தோர் கற்பனையின்
சூழ்ச்சியென்றே கண்டு கொண்டேன்.

இவ்வாறு கதையை முடித்த பாரதியார் அதை வெறுங் கற்பனையாக விட்டுவிட விரும்பாமல்,

ஆன்ற தமிழ்ப் புலவீர் கற்பனையே யானாலும்
வேதாந்த மாக விரித்துப் பொருளுரைக்க
யாதானும் சற்றே இடமிருந்தாற் கூறீரோ?

என்று தம் கற்பனைக் கதை ஒரு வேதாந்த தத்துவத்தை உட்பொருளாகக் கொண்டு பிறந்தது என்று கூறாமற் கூறி முடிக்கிறார்.

குயில் தன் முன்பிறப்பு அறிதல், இங்கே மெய்யுணர்தல் என்ற தலைப்பில் கூறப்பட்டது.

இந்த முன்பிறப்புக் கதை குயில் தான் நடத்திய மூன்று காதல் நாடகங்களுக்குச் சமாதானமாகச் சொன்னது என்று கூறலாம்.

தன்னை நாடிவந்த பாவலனிடம் காதல்மொழி பேசிய குயில், குரங்கிடமும், மாட்டிடமும் தான் காதல் கொண்டிருப்பதாகவே பாடுகிறது.

தன் மாயப்பாட்டாலும், பேச்சாலும் அவற்றின் காதல் உணர்வுகளைத் தூண்டி விட்டுத் தன்னைக் காதலிக்கும்படி செய்கிறது. தன் அற்புதமான பாட்டுத் திறத்தால், அது தன்னைக் கேட்பாரை மோகவெறி கொள்ளச் செய்யும் ஆற்றல் பெற்றதாக அமைகிறது.

குயிலின் பாட்டில் பாவலன் தன்வயமிழந்ததைக் கூறுவது—தன்னை மறந்து பாட்டோடு பாட்டாகத்தான் கலந்து நின்றதைக் கூறுவது— மிக அருமையாய் அமைந்துள்ளது.

பாட்டு முடியும்வரை பாரறியேன் விண்ணறியேன்
கோட்டுப் பெருமரங்கள் கூடிநின்ற காவறியேன்
தன்னை யறியேன் தனைப்போல் எருதறியேன்
பொன்னை நிகர்த்த குரல் பொங்கிவரும் இன்பமொன்றே
கண்டேன்!

கடவுள் எத்தனையோ அற்புதங்களைப் படைத்தார்; அற்புதமாக உலகத்தை நடத்திச் செல்கிறார்; அரியபெரிய செயல்களையெல்லாம் செய்கிறார். அவருடைய சாதனைகள் பெருஞ்சாதனைகள்! அவருடைய அறிவு பேரறிவு! அவர் பெரிய சமர்த்தர்! ஆனாலும் அவர் படைத்தவற்றிலே கானாமுதம் படைத்த காட்சி பெரும் விந்தையாகும்!

காட்டு நெடுவானம் கடலெல்லாம் விந்தையெனில்
பாட்டினைப்போல் ஆச்சரியம் பாரின்மிசையில்லையடா!
பூதங்கள் ஒத்துப் புதுமைதரல் விந்தையெனில்
நாதங்கள் சேரும் நயத்தினுக்கு நேராமோ!
ஆசை தருங் கோடி யதிசயங்கள் கண்டதிலே
ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமன்றோ!

இப்படி ஓர் அற்புதமான பாட்டுத் திறத்தைப் பெற்றிருந்த குயில், பாவலனையும் காதலித்து மாட்டையும் குரங்கையும் காதலித்து, இவர்கள் மூவருமே தன்மேல் காதல் பித்தேறித் திரியச் செய்கிறது. இந்தக் குயிலை 'நாணமிலாப் பொய்க் குயில்' என்று கூறிய பாரதியார் இதன் முற்பிறப்பை முனிவர் வாயிலாகக் கூறும்போது, மூன்று பேரிடமும் காதல்மொழி பேச நேர்ந்ததற்கு—முன்பிறப்பினால் ஏற்பட்ட விதியே காரணம் என்று கூறித்தான் முற்பிறப்பு வரலாற்றைத் தொடங்குகிறார்.

இப்பிறப்புக் குயில் தன்னைக் கண்ட ஒவ்வொருவரையும் காதலிக்கிறது; அவர்களைத் தன் மீது பெருமோகம் கொள்ளச் செய்கிறது. இந்த நாணமிலாச் செயல் ஒன்றே செய்கிறது. முற்பிறப்புக் குயில்—அதாவது சின்னக் குயிலி—மோசம் நாசம் நீலிவேசம் என்றவற்றிலே திறனுடையதாக விளங்குகிறது.

முதலில் மாமன் மகனைத் திருமணம் செய்துகொள்ள ஒப்புகிறது.

மாலையிட வாக்களித்தாய்
மையலினால் இல்லை; அவன்
சால வருந்தல்
சகிக்காமல் சொல்லிவிட்டாய்!

இது உண்மையான காதலினால் கொடுத்த வாக்கல்ல; மாடன் மீது கொண்ட இரக்கத்தால் என்கிறார்.

தந்தை சின்னக் குயிலியை நெட்டைக் குரங்கனுக்குக் கட்டிக் கொடுக்க முடிவு செய்கிறான். இதை யறிந்த மாடன் குயிலியிடம் வந்து சினம் பேசுகிறான். அப்போது குயிலி,

கட்டாயமாக நான் நெட்டைக் குரங்கனுக்கு மாலையிட்டாலும், மூன்று மாதத்தில் பேதம் விளைவித்து வந்து விடுவேன்; மீண்டும் உனக்கே மனைவியாக வருவேன் என்று சொல்கிறது. இதுவும் காதலினால் இல்லை; இரக்கத்தால் என்கிறார்.

கடைசியில் சேர இளவரசனையே காதலிக்கிறாள் சின்னக் குயிலி.

மாடனிடம் காதல் இல்லாமலே மணம் புரியச் சம்மதிக்கிறாள். நெட்டைக் குரங்கனைக் கட்டிக் கொண்டு, அவனோடு சிலநாள் வாழ்ந்துவிட்டு மீண்டும் தான் காதலிக்காத மாடனிடம் வந்து விடுவதாகக் கூறுகிறாள். கடைசியில் இளவரசனைக் கண்டதும் காதல் கொண்டு அவனைக் கூடுகிறாள். இங்கே சின்னக் குயிலியின் செயல்—காதல்—எந்தப் பண்பாட்டின் அடிப்படை என்பது விளங்கவில்லை.

மாலையழகின் மயக்கத்தால் உள்ளத்தே
தோன்றியதோர் கற்பனையின் சூழ்ச்சி

என்று இந்தக் கனவுக் கதையைக் கூறும் பாரதியார், இந்தக் காதல் கதையின் மூலம் எதைக் கூற வருகிறார். உண்மையான காதலையா? தெய்வீகக் காதல் என்பது இப்படித்தான் இருக்குமா? எல்லாம் புரியாத புதிராய் இருக்கிறது. மனம் போன போக்கில் கதையைக் கொண்டு சென்றிருக்கிறார்.

கண்டது காட்சி; கொண்டது கோலம் என்று சொல்லுவார்களே அந்தப் போக்கில் அமைந்துள்ளது குயிலின் காதல் கதை. அதன் முற்பிறப்புக் கதையோ இன்னும் மோசமாக இருக்கிறது.

இப்படித்தான் வாழவேண்டும் என்று சொல்லுவதை விட்டு, எப்படியும் வாழலாம் என்று எடுத்துக் காட்டுவதாகவே குயிலின் காதல் அமைகிறது. அழகான வருணனைகள், கடவுள் படைப்பு விளக்கம், காதல் பற்றிய கருத்தோவியங்கள், இசையின் உயர்வு, ஓட்டமான கவிதை இத்தனையும் சேர்த்து ஒரு மாயக் குயிலைப் படைத்துள்ளார் பாரதியார். இந்த மாயக் குயிலின் கதைக்கு, வேதாந்தப் பொருள்தான் கூற வேண்டியிருக்கிறதே தவிர, சித்தாந்தப் பொருள் கூற முடியவில்லை.

மாயக் கதையின் பொருளறிய மீண்டும் ஒரு மாயா லோகத்திற்குச் செல்ல வேண்டிய நிலையில் கதை முடிவு அமைந்துள்ளது.

குயிலின் மெய்யுணர்தல் முன்பிறப்பு வரலாறு அறிதல் என்ற நிலையில் அமைந்துள்ளது. சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் மெய்யுணர்தல் நாட்டு நிலையுணர்தல் என்ற நிலையில் அமைந்துள்ளது. இங்கே ஓர் அற்புதமான காட்சியைப் படைக்கிறார் பாரதிதாசன்.

இங்கிலாந்து தேசத்தான் பேசி முடிந்தவுடன், இடையில் காதல் உணர்வு தோன்றுகிறது. குப்பன் வேண்டுகோளுக் கிணங்கி வஞ்சி முத்தமிட நெருங்குகிறாள். முத்தமிடப் போகையிலே ஐயையோ! ஐயையோ! என்ற அவலமொழி காதில் விழுந்தது! முத்தம் கலைந்தது. ஐயையோவைக் தொடர்ந்து கவனிக்கிறார்கள்!

"இதோ ஒரு நொடியில் சஞ்சீவி மலையை வேரோடு பெயர்த்து எடுத்து வருகிறேன்"

இந்தச் சொற்கள் அவர்கள் காதில் விழுகிறது. தாங்கள் இருக்கும் சஞ்சீவி மலையை யாரோ பெயர்த்தெடுக்கப்

போகிறார்கள் என்றவுடனே குப்பன் நடுங்குகிறான். தங்கள் இருவரின் கதி என்ன ஆகும் என்று அஞ்சுகிறான்.

அவன் நடுக்கத்தைக் கண்டு வஞ்சி தெம்பூட்டுகிறாள். "இவ்வளவு பெரிய மலையை யாரால் பெயர்க்க முடியும்! இது பொய்! நம்பாதீர்கள்" என்கிறாள்.

அவன் அச்சம் மாறுவதற்கு முன் தொடர்ந்து சொற்கள் காதில் விழுகின்றன. "இராமன் அருள் உண்டு. ஏன் தயங்குகிறாய்? உன்னால் வானுயரம் வளரமுடியுமே! தயங்காதே! ஓடிப்போய் மலையை எடுத்துவா"! என்று கட்டளை யிடும் பேச்சுக் கேட்கிறது.

இதைக் கேட்டுக் குப்பன் பெரிதும் நடுங்குகிறான். மலை அசைவதுபோல் தோன்றுகிறது. எங்கோ பெயர்ந்து நகருவது போல் இருக்கிறது. உடல் வெடவெடவென்று நடுங்க அவன் வஞ்சியைப் பார்த்து

"இப்போது நாம் என்ன செய்வோம்? யாரோ இராமன் அருள் பெற்றவனாம். இவ்வளவு பெரிய மலையைப் பஞ்சு மூட்டையைத் தூக்குவது போல் தூக்குகின்றான். இனி இறங்கிச் சென்றி தப்பித்திடவும் நேரம் இல்லையே. பேசிப் பேசிப் பொழுதைக் கழித்து விட்டாயே! இதோ முத்தம் தருகிறேன் என்று சொல்லிச் சொல்லி நேரத்தைக் கடத்தி விட்டாயே! இப்போது மலையைத் தூக்கிச் சென்று கடலில் போடப் போகிறானே! நாம் எப்படித் தப்புவோம்! இனிப் பிழைக்க மாட்டோமே!" என்று கலங்கித் தவிக்கிறான் குப்பன்.

குப்பன் எதையும் எளிதில் நம்பிவிடும் இயல்புள்ளவனாய் இருக்கிறான். எளிதில் உணர்ச்சி வசப்படுபவனாய் இருக்கிறான். வஞ்சியோ, எதையும் அமைதியாக ஆராய்ந்து

பார்த்து, முடிவு செய்பவளாக விளங்குகிறாள். அவள் குப்பனுக்குத் தெளிவு மொழி கூறுகிறாள்.

ஏன் வீணாகப் பயப்படுகிறீர்கள்? இந்த உலகம் தோன்றிய நாள் தொட்டு மலையைத் தூக்கும் மனிதன் பிறந்ததில்லை. இனிப் பிறக்கவும் முடியாது. ஒரு மனிதன் எப்படி பூமிக்கும் வானத்துக்குமாக வளர முடியும்? எவனோ சொல்லுகிறான் என்றால் அதை நீங்கள் ஏன் நம்பவேண்டும்? வஞ்சி பேசிக் கொண்டிருக்கும் போதே குரல் தொடர்கிறது.

இந்நேரம் போயிருப்பார்!
இந்நேரம் பேர்த்தெடுப்பார்!
இந்நேரம் மேகத்தில்
ஏறிப் பறந்திடுவார்!
உஸ் என்று கேட்குதுபார்
ஓர்சத் தம் வானத்தில்
விஸ்வரூபம் கொண்டு
மேலேறிப் பாய்கிறார்.

குப்பன் மலை பெயர்ந்து பறப்பதாகவே எண்ணுகிறான்.

அறிவுள்ள வஞ்சி தொடர்ந்து அந்தப் பேச்சைக் கவனிக்கு மாறு கூறுகிறாள். குரல் தொடர்கிறது.

இப்படியாக அனுமார் சஞ்சீவி மலையை எடுத்துச் சென்று இலங்கையில் வைத்தார். சஞ்சீவி மருந்தின் சக்தியால் ஏற்கெனவே செத்துக் கிடந்த இராமனும் இலட்சுமணனும் உயிர் பெற்று எழுந்தார்கள். மீண்டும் அனுமார் மலையைத் தூக்கிக் கொண்டு போய் இருந்த இடத்தில் வைத்துவிட்டு வந்தார். மறுபடி ஒரு நிமிடத்தில் திரும்பிவந்து செத்துப் பிழைத்த இராமன் காலில் விழுந்து வணங்கினார்.

"எனக்குப் பயம்தான். இருந்தாலும் ஒரு நம்பிக்கை—ஓர் ஆபத்தும் இராதென்று நினைத்தேன்—நல்லவேளை என் நம்பிக்கை பலித்தது—தப்பித்தோம்" என்று மூச்சு விடுகிறான் குப்பன்.

வஞ்சி கேட்கிறாள்: "அன்பரே, நாம் இந்த மலைக்கு வந்தது முதல் இந்த நேரம் வரை நடந்த ஆச்சரியமான நிகழ்ச்சி என்ன?"

"என்னடி, இது தெரியவில்லையா? இந்த மலையில் நாம் இருக்கும்போதே அந்த அனுமார் வந்ததும், மலையைப் பெயர்த்து இலங்கையில வைத்ததும், திரும்ப எடுத்துவந்து பழைய இடத்தில் வைத்ததும் நினைத்துப் பார்த்தால், ஆடாமல் அசையாமல் மலையைப் பெயர்த்து சற்றுக் கூடக் குலுங்காமல் கண்ணாடிப் பாத்திரத்தைக் கல் தரையில் வைத்ததுபோல் அவ்வளவு மெதுவாக வைத்தாரே அந்த இடம்தான் ஆச்சரியம்! தலைமாட்டிக்கொள்ளாமல் கெட்டிக் காரத் தனமாகக் குனிந்து வைத்தாரே அது பேராச்சரியம்!

குப்பனுக்கு வஞ்சி பதில் சொல்லத் தொடங்குமுன் மீண்டும் குரல் ஒலிக்கிறது.

இதுவரை இந்தக் கதையை நிறுத்துகின்றேன். நாளை மீண்டும் தொடர்ந்து சொல்லுகின்றேன். இந்தச் சத்திய ராமாயணக் கதையைக் கேட்டவர்கள் சொன்னவர்கள் எல்லாரும் இந்த உலகத்தில் உள்ள செல்வ போகம் அனைத்தும் அனுபவித்து, வைகுண்டம் போய் அங்குள்ள தேவலோக இன்பங்களையும் குறையாது அனுபவிப்பார்கள்! ஜானகி காந்தஸ்மரனே! ஜயஜயராம்!

மானேசு தென்ன என்றான் வையம் அறியாக் குப்பன்
முன்புதான் உங்களுக்கு முத்தம் கொடுக்கையிலே
சொன்ன ஐயையோ தொடங்கி இதுவரைக்கும்
ராமாயணம் சொல்லி நாளைக் கழிக்கின்ற

ஏமாந்தார் காசுக் கெசமானன் என்றுரைக்கும்
பாகவதன் சொன்னான் பலபேரைக் கூட்டியே,
ஆகியதும் இத்த அரிய உழைப்புக்குப்
பத்தோ பதினைந்தோ பாகவதன் பெற்றிடுவான்.

இதில் வியப்பதற் கொன்றும் இல்லை. இதோ இந்தக் காட்சி தரும் மூலிகையை விழுங்கிப் பருங்கள் என்கிறாள். ஒரு மாளிகையில் பாகவதர் ஒருவர் இராமாயணம் படிப் பதும், மக்கள் இராமாயணம் கேட்டுவிட்டுத் திரும்புவதும், பாகவதர் தமக்குக் கிடைத்த பணத்தைத் தட்டிப் பார்ப்பதும் மகிழ்ச்சி கொள்வதும் ஆகிய காட்சிகள் தெரிகின்றன.

வஞ்சி ஒரு பெரிய சொற்பொழிவு நடத்துகிறாள். மூடத் தனங்களை வளர்க்கும் இராமாயணம் போன்ற கதைகளைப் பற்றியும் பகுத்தறிவு கொள்ள வேண்டியதைப் பற்றியும் பேசுகின்றாள்.

ராமாயணம் என்ற நலிவு தருங்கதை
பூமியில் இருப்பதை இப்போதே அறிகின்றேன்

என்று கூறிக் குப்பன் திருந்துகின்றான். மூடப்பழக்கத்தை ஓடச் செய்ய உறுதி யெடுக்கின்றான். பிறகு இருவரும் சாரலுக்கு இறங்கிவந்து இன்பமாகக் கூடுகிறார்கள்.

சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் மெய்யுணர்தல் பகுதி இவ்வாறு குப்பன் பகுத்தறிவு பெறும் காட்சியாக அமைகிறது.

## ஆய்வுரை

குயில்—சஞ்சீவி பர்வதத்தின் சாரல் இரண்டுமே ஒரே யாப்பில்—கலிவெண்பாவில் இயன்றுள்ளன. சொல்லாட்சி கள்—ஏறக்குறைய ஒரே மாதிரியாக—புதுமையாக அமைந் துள்ளன. மிக எளிய நடையில் இயன்றுள்ளன. நல்ல கற்பனைக்கு எடுத்துக் காட்டாக இரண்டுமே அமைந் துள்ளன. படிக்கத் தொடங்கினால் ஒரே மூச்சில் முடிவு

வரை படித்துப் பார்த்துவிடும்படியான விரைவு நடையைப் பெற்றுள்ளன. ஒன்று கனவில் தோன்றிய கற்பனையாகவும், மற்றொன்று மூலிகையில் பிறந்த காட்சியாகவும் அமைந்துள்ளன. எனினும் கதையமைப்பு ஒன்றுக்கொன்று முரண் பட்டதாக—நேர்மாறானதாக அமைந்துள்ளன. குயில் பாட்டு—புராணக்கதை போல் அமைந்துள்ளது.

தேசியக் கவியாகவும் புதுமைக் கவியாகவும், புரட்சிக் காரராகவும் மக்களுக்கு அறிமுகமாகியுள்ள பாரதியார் இது போன்ற ஒரு கதையைப் படைத்ததே—நம் எதிர்பார்ப்புக்கு மாறுபட்டதாக உள்ளது.

> காதல் காதல் காதல்
> காதல் போயிற் காதல் போயிற்
> சாதல் சாதல் சாதல்

என்ற வரிகளைப் படிக்கும்போது, காதலுக்கு ஒரு இலட்சியப் பொருளை நாம் ஏற்றிப் பார்க்கிறோம். ஆனால் குயிலின் காதலிலே அந்த இலட்சியக் காதலைப் பார்க்கமுடிவதில்லை. மனிதனையும் மாட்டையும் குரங்கையும் அது வேற்றுமை யில்லாமல் காதலிக்கிறது. இதற்கு வித்தான காரணம் என்று சொல்லி ஒரு முற்பிறப்புக் கதையை உண்டாக்குகிறார் பாவலர். அந்த முற்பிறப்புக் கதையில் பழம் புராணக் கூறே மேலோங்கி யிருக்கிறது. குரங்கனோடு வாழ்க்கை நடத்தி விட்டு மாடனிடம் வந்துவிடுவதாக ஆறுதல் கூறும் குயிலி சேரமான் மகனிடம் ஆறாக் காதல் கொண்டு விடுகிறாள். கொலையுண்டு இறந்த மாடனும் குரங்கனும் பேயாகிக் குயிலியை ஒரு குயிலாக மாற்றி, அதைச் சுற்றிக் கொண்டு திரிவதாக முற்பிறப்புக் கதை கூறும் முனிவர் கூறுகிறார், ஆனால், நடப்பு நிகழ்ச்சியை நோக்கும்போது, குயில்தான் அவர்களை மயக்கிக் காதல் போதையேறச் செய்கிறது. மாடும் குரங்கும் குயிலை ஆட்டிப் படைக்கும் நிகழ்ச்சி ஒன்று

கூடக் காணப்படவில்லை, குயில் தான் அவற்றை ஆட்டிப் படைக்கிறது. குயிலுக்கு காதல் ஒரு வேடிக்கை விளையாட்டாக இருக்கிறது. மன உணர்வுகளைத் தூண்டி விட்டு, ஒவ்வொருவரும் தன் மீது மோக மயக்கம் அடைவதை அது வேடிக்கை பார்க்கிறது. இப்படிப்பட்ட குயிலைத் தான் நாம் பார்க்கிறோம்.

எதிரில் இருப்பவரை உயர்த்திப் பேசுவதும்—இல்லாத வரைத் தாழ்த்திப் பேசுவதும்—ஏற்கெனவே இப்படிப் பேசினோமே என்பதைப் பற்றிக் கவலைப் படாமல், அந்தந்த நேரத்திற்கு யார் எதிரில் நிற்கிறார்களோ அவர்களையே உயர்த்துவதும் காதலிப்பதும் குயிலின் இயல்பாக இருப்பதைப் பார்க்கிறோம். கடைசிவரை அது மாயக் குயிலாகவே இருக்கிறதே தவிர, யாராவது ஒருவருக்கு நேயக் குயிலாக இல்லை.

பாரதியார், தம் ஆற்றல் அறிவு திறன் அத்தனையும் கொண்டு சித்திரித்த இந்தக் குயில் இலட்சியக் குயிலாகக் காணப்படவில்லை.

குயில் பாட்டிலே பாரதியாரின் கவியாற்றல் முழுவதும் அழகாக வெளிப்படுகிறது. நுட்பமான நோக்கறிவு சிறப்பாக வெளிப்படுகிறது. இயற்கை வருணனை, தத்துவபோதனை போன்ற கூறுகளெல்லாம் சிறப்பாக அமைந்துள்ளன. ஆனால் இத்தனை சிறப்புக்களும் கூடி மற்றொரு புராணக் கதையையே படைத்து விட்டமைதான் பெருங்குறையாக உள்ளது.

இந்தக் குறையைத் தீர்த்து வைக்கிறார் பாவேந்தர் பாரதிதாசன் சஞ்சீவி பர்வதத்தின் சாரலிலே. பாவேந்தரின் படைப்பு—பகுத்தறிவைப் பரப்பும் ஒரு குறிக்கோளோடு ஆக்கப் பெற்றிருக்கிறது. இராமாயணம் போன்ற பகுத்தறிவுக் கொவ்வாத கதைகளால் நாட்டில் மூடத்தனம் வளர

வாய்ப்புண்டே தவிர முன்னேற்றம் அடைய வாய்ப்பில்லை என்பதை அழகாக, இலக்கிய நயத்தோடு எடுத்துக் காட்டுகிறது சாரல்கதை.

எதையும் நம்பும் குப்பன்—நாட்டில் இராமாயணம் போன்ற நலிவு தரும் கதை இருப்பதை அறியாத, நாட்டுணர்வில்லாத குப்பன்—வஞ்சியால் திருத்தப்படுகிறான். வஞ்சியிடம் காதல் கொண்ட குப்பன், தெளிந்த மனம் படைத்த வஞ்சியால் புது மனிதனாகிறான்.

இராமாயணக் கதையிலே கம்பன் திறமை முழுவதும் வெளிப்படுகிறது. நூற்றுக் கணக்கான சந்த விருத்தங்களைப் பாடிய கம்பன், கவியுலகிலே கொடி கட்டிப் பறக்கிறான். பாத்திரப் படைப்பில் அவன் செய்த புதுமை கண்டு பாரெலாம் வியக்கிறது. அவன் கையாண்ட உவமைகள், சொல்லாட்சிகள், கவிதா முத்திரைகள் அனைத்தும் அவனுக்குப் புகழ் சேர்க்கின்றன. ஆனால் அவன் எடுத்துக் கொண்ட கதை இராமாயணம். அந்த இராமாயணம் சிறந்த இலக்கியமாக மதிக்கப்படலாம். ஆனால், நாட்டில் மூடத்தனம் வளருவதற்கு அடிப்படையான ஒரு பழம் குப்பையான கதையாக இருந்துவிட்ட காரணத்தால், கம்பன் கடைசிவரை பழிப்புக்கு ஆளானவனாக இருக்கிறான். அறிவுலகம் அவனை இந்த நாட்டுக்குத் தீமை செய்தவனாகவே கருதுகிறது. அப்படிப்பட்ட தீய கதையின் கருத்தை எடுத்துக் காட்டி, அதுபோன்ற கதைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு, காலத்துக்கேற்ற புத்திலக்கியம் படைக்க வேண்டிய இன்றியமையாமையை எடுத்துக் காட்டிப் படைத்த புதிய இலக்கியத்தின் முன்னோடிதான் சஞ்சீவி பர்வதத்தின் சாரல்.

பாவேந்தர் பாரதிதாசன் சஞ்சீவி பர்வதத்தின் சாரல் கதையைப் படைத்ததன் மூலம் புத்துணர்வு கொண்ட இளம் உள்ளங்களிலெல்லாம் நிலையாக வாழும் இலட்சியக் கவிஞராகத் திகழ்கின்றார்.

# பாரதியும் பாரதிதாசனும்

பல்லாண்டு பல்லாண்டாய்த் தமிழர் நாட்டில்
    பாவானம் வெறும்வெளியாய் நீலம் பூத்தே
இல்லாமை நிலையெய்திக் கிடந்த போதில்
    எழுகதிர்போல் பாரதியார் தோன்றி வந்தார்.
சொல்லாண்டு நாட்டுமக்கள் நெஞ்சை யாண்டு
    சுடர்க்கவிகள் பலப்பலவாய்த் தோற்று வித்து
வல்லாண்மை யுணர்வெழுப்பி உரிமை வேட்கை
    வளர்த்திந்தத் திருநாட்டை உயரச் செய்தார்.

வேதாந்தம் பாடுகின்ற புலவர்; தெய்வ
    விளையாடல் பாடுகின்ற புலவர்; மாதர்
பாதாதி கேசங்கள், புகழ்ச்சி மாலை
    பல்லிளித்துப் பாடுகின்ற புலவர், கற்றோர்
மூதேவி வளர்ப்பானார் என்று நெஞ்சம்
    முறிந்திருக்கும் புலவர்பரம் பரையில் நாட்டு
மாதாவைப் பாடுகின்ற சக்தி யாக
    மாவீரர் பாரதியார் தோன்றி வந்தார்.

வித்தகனாம் பாரதியின் வழியில் வந்தோர்
விதவிதமாய்ப் புதுப்பாக்கள் குவிக்க லானார்
கத்தியின்றி ரத்தமின்றி என்ற நாமக்
கல்லாரும் கவிமணியும் பாடு வோரின்
சித்தத்தில் இடம்பிடிக்கும் யோகி யாரும்
சிதம்பரனார் பொதுவுடமை ஜீவா னந்தம்
இத்தனைபேர் மத்தியிலும் சுப்பு ரத்னம்
இணையற்ற புரட்சிப்பா வேந்த ரானார்.

சீறுபுலி யனையதொரு தோற்றங் கொண்டோன்
சினமுழக்கம் செய்தானேல் பகை நடுங்கும்
வீறுமிகு சொற்களினால் புரட்சிப் போரை
விளைவிக்கும் ஆற்றலுளான் சுப்பு ரத்னம்
ஏறுபோற் பீடுநடைப் பார திக்கே
யான்தாசன் யான்தாசன் என்று சொன்னால்
மாறுபடும் கருத்துடையார் அல்லர் என்றே
மனங்கொண்டே இனங்கண்டு கொள்ள லாகும்.

கண்ணனையும் முருகனையும் காளியையும்
கனிந்துருகிப் பாடுகின்ற பார திக்கோ
எண்ணத்தில் நாத்திகமே குடிகொண் டுள்ள
இச்சிங்கம் எவ்வாறு தாசன் ஆனான்?
வண்ணத்துக் கவிபாடத் தெய்வ சக்தி
வளமிருக்க வேண்டுமெனும் பார திக்கு
விண்ணளவு கற்பனையே நாத்தி கத்தால்
விரித்துரைக்கும் புலவனொரு தாச னாமோ?

பாரதியார் தெய்வீகம் போற்றி னாலும்
பழமையிலே வெறுப்புடையார்; நாடு காக்க
வீரர்களே வேண்டுமெனும் புரட்சி நோக்கர்
வெறும்பஜனைக் கூட்டத்தை வெறுக்கும் சீலர்
தேரெனினும் விரைந்தோட வேண்டு மென்னும்
சிந்தனையில் ஞானத்தேர் உலாவந் தாராம்
யாரிவரென் றறிந்தேதான் தாச னானார்
அரட்டுகின்ற பார்வையுள்ள புரட்சி வேந்தர்.

ஏய்த்துத்தான் உயிர்வாழ வேண்டுமென்றே
எவர்முயன்று வாழ்ந்தாலும் கடிந்து நிற்கும்
காய்த்தெழுந்த நெஞ்சத்தான் பார திக்குக்
கனகசுப்பு ரத்தினம்தான் தாச னானான்!
வாய்த்துள்ள உயிரிங்கே நாட்டுக் காக
வழங்கிடலே சிறந்ததென்னும் கருத்தில் இந்தச்
சேய்த்தமிழர் இருவரிலும் வேறு பாடு
சிறிதுமில்லை! ஐயமில்லை! உண்மை காணீர்!

பாரதத்தை ஆண்டுவந்த வெள்ளைக் காரப்
பரங்கியரை ஓட்டுதற்குத் துடித்த நெஞ்சும்
சீரதிக முடையதமிழ் நாட்டில் இங்கே
சிலர்வாழப் பலர்மாயும் நிகழ்ச்சி கண்டு
நேர்மையுடன் கொதித்ததன் மான நெஞ்சும்
நிகரில்லை என்றெவரே கூற வல்லார்
பாரதிக்குத் தக்கதொரு தாசன் தானே
பண்புடைய கனகசுப்பு ரத்னம் காணீர்!

வில்லாளி அருச்சுனனைப் பார திக்கு
மிகப்பிடிக்கும் உயர்வீரன் என்ப தாலே!
சொல்லாலும் செயலாலும் வாய்மை காத்துத்
தோற்றாலும் பணியாத நெஞ்சங் கொண்ட
வல்லானாம் இராவணனைப் பாவேந்தர் தம்
வழிமுதல்வன் எனவீர வணக்கம் செய்வார்!
வல்லாண்மை மிக்கஇரு கவிஞர் கட்கும்
பகைமுடிக்கும் வீரரையே மிகப் பிடிக்கும்!

தலைப்பாகைச் சுடர்விழிகொள் பார திக்குத்
தமிழ்ப்பெண்ணின் விடுதலையே நோக்க மாகும்!
சிலைபோன்ற பெண்ணுக்குக் கைமை நோன்பு
சிறைப்படுத்தும் கொடுமையெனத் தாசன் கூறும்!
அலைகின்ற இருநெஞ்சங் காதல் கொண்டே
அன்பாக அணைகின்ற வாழ்வு தானே
நிலையான இன்பத்தை யளிக்கு மென்று
நினைப்பவர்கள் இருவருமே ஒருநோக் குள்ளார்.

பக்தியிலே சக்தியுண்டென் றெண்ணி னாலும்
பழமூடப் பழக்கத்தைச் சாடி நிற்கும்
மிக்கபுதுக் கொள்கையிலே ஊறி நிற்கும்
மீசையுள்ள பாரதிக்குத் தாசன் எந்தப்
பக்கத்தில் வந்தாலும் மூடப் போக்கைப்
பாய்ந்தெதிர்க்கும் வெறியுள்ளான் ஆகை யாலே
சிக்கென்று பாரதியைக் குருவாய்க் கொண்டான்
சிங்கத்தைப் பின்பற்றும் சிங்க மானான்!

**குயில்பாட்டு பாரதிக்குப் பெருமை சேர்க்கும்**
**கோலமிகும் அப்பாட்டுப் போற்ப டைத்த**
**மயில்ஆடும் சஞ்சீவி பர்வதத்தின்**
**மலைச்சாரல் கதைதாசன் பெருமை யாகும்!**
**மயல்சேர்க்கும் கற்பனையாம் குயிலின் பாட்டு**
**மற்றிந்தச் சஞ்சீவி மலைக் கதையோ**
**துயில்தீர்க்கும் பகுத்தறிவுக் கருத்து மிக்க**
**துடிப்பான புத்தெழுச்சிக் கீதம் ஆகும்!**

*பாஞ்சாலி சபதத்தில் புதுமைப் பெண்ணின்*
*பகுத்தறிவு வாதத்தைக் கேட்க லாகும்*
*நோஞ்சானாம் தர்மர்தனைச் சூதில் விற்கும்*
*முறைகேட்டை எதிர்க்கின்ற புலியாகின்றாள்!*
*வாஞ்சையுடன் தன்மகற்குப் போர்ப் பயிற்சி*
*வழங்குகின்ற வீரத்தாய் தாசன் காட்டும்*
*தேன் சுவையாம் கற்பனையில் காணுகின்றோம்*
*திருநாட்டிற் பெண்ணினத்தின் எழுச்சி கண்டோம்*

*புதுக்கருத்தின் விடிவெள்ளி பார திக்குப்*
*பொற்கதிராய்ப் பின்தோன்றும் தாசன் ஆவான்!*
*எதிர்க்கின்ற வீரத்தால் பழமை சாடி*
*எழுச்சிமிகும் உலகத்தைப் படைக்கும் போக்கில்*
*நதிமூலம் பாரதியாம்; கடலிற் கூடும்*
*காவிரியாம் தாசனிவன் என்ன லாகும்!*
*குதிகொள்ளும் புதுக்கருத்தை ஏற்று நிற்கும்*
*கொள்கைக்கிவ் விருவருமே தலைமை யாகும்!*

**(நாச்சியப்பன் பாடல்கள்—தொகுதி. 2)**

# பாரதிதாசன

நாட்டினில் மூடக் கொள்கை
நாட்டித்தம் வாழ்வை யின்பத்
தோட்டமாய் அமைத்துக் கொள்ளத்
தோன்றிய சுயவ ரெல்லாம்
ஏட்டினை மூட்டை கட்டி
எடுத்தனர் ஓட்ட மென்னப்
பாட்டினை முழக்கு கின்றோன்
பாரதி தாச னன்றோ?

கம்பனும் பாடி வைத்தான்
கவிநயம் சொட்டச் சொட்ட
என்பவர் தாமும் பொய்யே
எழுதினா னென்று சொல்வார்!
நம்புதற் கியலாப் பாதை
நடப்பதில் உள்ள கேட்டை
மன்பதைக் கெடுத்து ரைத்தோன்
பாரதி தாச னன்றோ?

தமிழெனில் உயிரே யென்பான்
தரிக்குமென் மூச்சே யென்பான்
அமிழ்தெனு முணவே யென்பான்
அகத்தெழு முணர்ச்சி யென்பான்
கமழ்ந்திடு மணமே யென்பான்
கவிதையின் சுவையே யென்பான்
தமிழ்க்கவி பார திக்குத்
தாசனும் நானே யென்பான்!

(நாச்சியப்பன்பாடல்கள்—தொகுதி. 2)

# தமிழாலயம் வெளியீடுகள்

## நாரா நாச்சியப்பன் எழுதியவை

| | | |
|---|---|---|
| 1. | நாச்சியப்பன் பாடல்கள் I | 15-00 |
| 2. | நாச்சியப்பன் பாடல்கள் II | 15-00 |
| 3. | மூன்று திங்களில் அச்சுத்தொழில் | 10-00 |
| 4. | புதுமுறை பஞ்சதந்திரக் கதைகள் | 15-00 |
| 5. | நாயகப் பெருமான் | 4-00 |
| 6. | ஏழாவது வாசல் | 5-00 |
| 7. | அசோகர் கதைகள் | 2-00 |
| 8. | பறவை தந்த பரிசு | 4-00 |
| 9. | மாயத்தை வென்ற மாணவன் | 5-00 |
| 10. | அப்பந் தின்ற முயல் | 5-00 |
| 11. | தாவிப்பாயும் தங்கக் குதிரை | 4-00 |
| 12. | பள்ளிக்குச் சென்ற சிட்டுக் குருவிகள் | 5-00 |
| 13. | குயில் ஒரு குற்றவாளி | 5-00 |
| 14. | பாடுபாப்பா | 4-00 |
| 15. | நான்கு பார்வைகளில் பாரதிதாசன் | 7-00 |
| 16. | பாசமுள்ள நாய்க்குட்டி | 5-00 |

**தமிழாலயம்: 137, ஜானிஜான் கான் தெரு.**

**சென்னை-600 014.**